பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 31 சனிக்கிழமை 14.01.2023 கதிர் 69

### இது ரகசியம் அல்ல!

தமிழரசு தவிர்ந்த ஏனைய ஆறு கட்சிகள் தமக்குள் கூட்ட மைப்பது பற்றி யாழ்ப்பாணம் ரில்க்கோ விடுதியில் நேற்றுக் கூடிஆராய்ந்துகொண்டிருந்தன. பிற்பகல் சமயம். அங்குள்ள நிலைமையை அறிவதற்காக அங்கிருந்த எனது

தொடர்ச்சி 2

# என்னை வெறும் பொம்மையாக நினைத்தார்கள் அதனால் வெளியேறி விட்டேன் என்கிறார் விக்கி

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜனவரி14

தமிழ்க் கட்சிகள் சில என்னை பொம்மை போல பாவித்துத் தாங்கள் நினைத்தவற்றைச் செய்வதற்கு முயற்சித்தார்கள் போல தெரிந்தது. அது எனக்கு மன வேதனையை ஏற்படுத்தியது. அதனால் கட்சிகளின் கூட்டத்தில் இருந்து நான் வெளியேறினேன் என தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்ற சந்திப்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானங்களுடன் அங்கு வந்திருந்து, அதனை மேற்கொள்ள திட்டமிட்டனர். சில விடயங்களில் இணக்கம் ஏற்பட்ட போதும் பல விடயங்கள் முரண்பாட்டைத் தோற்றுவித்தன.

தொடர்ச்சி 2



# ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி குத்துவிளக்குச் சின்னத்தில் வருகிறது!

## ஐந்து கட்சிகளின் புதிய கூட்டு

**(ந.லோகதயாளன்)**

**யாழ்ப்பாணம்,ஜனவரி 14**

**ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் ஆகிய ஐந்தும் சேர்ந்து 'ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி' என்ற பெயரில் குத்து விளக்குச் சின்னத்தில் (Brass Lamp Symbol) வரும் உள்ளூராட்சி தேர்தலில் களத்தில் குதிக்கின்றன. அது பற்றிய உத்தியோகபூர்வ அறிவித்தல் இன்று காலை வெளியாகும் என நம்பகரமாகத் தெரிய வந்தது.**

தொடர்ச்சி 2

## திட்டமிட்டபடி தேர்தல்கள் நடைபெறும் ஆணையம் உயர்நீதிமன்றுக்கு அறிவிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திட்டமிட்டவாறு நடைபெறும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று (வெள்ளிக்கிழமை) உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது.

ஓய்வுபெற்ற இலங்கை இராணுவ கேர்ணல் டபிள்யூ.எம்.ஆர்.விஜேசுந்தர வினால் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்றுப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே தேர்தல்கள்

தொடர்ச்சி 2

## விக்கி தரப்பை சமரசப்படுத்தும் தீவிர முயற்சிகள் இரவிரவாக!

தமிழரசு கட்சி தவிர்ந்த தமிழ்த் தேசிய கட்சிகளின் கூட்டமைப்பை ஸ்தாபிக்கும் முயற்சியில் இருந்து நேற்று வெளியேறிய தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் நீதியரசர் விக்னேஸ்வரனை மீண்டும் கூட்டமைக்கும் பேச்சுவார்த்தைக்குள் கொண்டு வரும் சமரசம முயற்சி நேற்று முன்னிரவு வரை

தொடர்ச்சி 2

## இந்திய மீனவர்களைப் பிடிக்கவும் இடிக்கவும் பாரிய இரும்புப் படகுகள் தருவாராம் டக்ளஸ்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன.13

எல்லை மீறி வரும் இந்திய மீனவர்களை மடக்கிப் பிடிப்பதற்கும் இடிப்பதற்கும் பாரிய இரும்புப் படகுகள் இரண்டை மீனவர்களுக்குத் தருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்தார்.

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்களுக்கு எதிராக குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்தி சங்கத்தினர் நேற்றையதினம் போராட்டம் ஒன்றை முன்னெடுத்து, அமைச்சரின்

தொடர்ச்சி 11

## உத்தியோகத்தர்களுக்கு இரவிரவாக குடைச்சல்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜன.14

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கா நாளைய தினம் பொங்கல் விழாவிற்காக யாழ்ப்பாணம் வருகை தருவதனால் கடற்றொழில் அமைச்சரும், வடக்கு ஆளுநரும் அரச உத்தியோகத்தர்களை இரவு, இரவாக அழைத்துக் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

அமைச்சர் மாவட்டச் செயலகத்தில் நேற்று

தொடர்ச்சி 11

## வாக்குகளை அபகரிக்கவே புதுப் புதுக் கூட்டுக்களாம்!

### அமைச்சர் டக்ளஸ் விசனம்

தமிழ் மக்கள் மத்தியில் புதிதாக உருவாக்கப்படும் கூட்டுகள்கள் மக்களின் நலன்சார்ந்தவை அல்ல என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழில் நேற்றைய தினம் நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு

தொடர்ச்சி 11

## 19,20 இல் ஜெய்சங்கர் இலங்கையில்



இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அதன்படி, எதிர்வரும் ஜனவரி 19 ஆம் மற்றும் 20 ஆம் திகதிகளில்

தொடர்ச்சி 11

## சீனக் குழு இன்று இலங்கை வரும்

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்மட்டக் குழுவொன்று இன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் ஜனவரி 18ஆம் திகதி வரை நாட்டில் தங்கி கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளனர்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின்

தொடர்ச்சி 11




## ரணிலின் நாளைய தேசியப் பொங்கல் நிகழ்வை ஆட்சேபித்து நல்லூரை நோக்கி மக்கள் பேரணி

### யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் முஸ்தீபு

வடக்கு, கிழக்கு வாழ் மக்களினுடைய பிரச்சினைகளுக்கு இதுவரை காலமும் தீர்வு வழங்கப்படாத நிலையில், தேசியப் பொங்கல் விழாக் கொண்டாட்டத்தை யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்து,

தொடர்ச்சி 11

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளருடன் தொடர்புகொண்டேன். நிலைமையை அவரிடம் தொலைபேசியில் கேட்டேன். அவர் சொன்ன பதிலை அப்படியே வாசகர்களுடன் பகிர விரும்புகிறேன்.

"ஸேர்... மூன்று சைவ ஹோட்டல்கள்... தனித் தனியாகப் போகின்றன... மிலிட்டரி ஹோட்டல் எல்லாம் ஒன்று சேர்ந்து விட்டன" என்றார் அவர்.

தமிழரசு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, விக்கியின் கட்சி ஆகியவைதான் அவர் கூறிய சைவக் கடைகள். ஆயுதம் தூக்காத தரப்புகள். அவை தனித்தனியாக இயங்கப் போகின்றனவாம். அவரின் கணக்கில் எஞ்சியவை எல்லாம் மிலிட்டரி (அசைவ) ஹோட்டல்கள்.

அவர் கூற வந்த அர்த்தம் எனக்கு புரிந்தது. வாசகர்களுக்கும் புரியும் என்று நினைக்கிறேன். இது அத்தரப்புகளுக்கு கொடுக்கப்பட்ட 'பிளஸ் பாயிண்ட்டா' அல்லது 'மைனஸ் பாயிண்ட்டா' என்பதை வாசகர்களே தீர்மானித்துக் கொள்ளட்டும்.

***

நேற்றைய சம்பவங்களை ஒட்டி சுமார் ஒரு வாரத்துக்கு முன்னர் நடந்த விடயம் ஒன்றைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

வெளியில் இருக்கும் தமிழ்த் தேசிய கட்சிகளையும் கூட்டமைப்பில் ஒன்று சேர்க்க வேண்டும் என்று ரெலோவும் புளொட்டும் சேர்ந்து தமிழரசைக் கோரி இருந்த வேளை அது. தமிழரசு ஒரு முடிவுக்கு வரவில்லை. அச்சமயத்தில் நான் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன்.

"இது செய்தி பிரசுரத்திற்கான விடயம் அல்ல. உங்களோடு பேசுவதை நான் பிரசுரிக்கப் போவதில்லை. ஆனாலும் ஒரு விடயத்தை அறிய விரும்புகிறேன்" என்ற பீடிகையோடு என் கேள்வியை அவரிடம் கேட்டேன்.

"வெளியில் நிற்கும் விக்கியின் கட்சி, ஸ்ரீ காந்தாவின் கட்சி மற்றும் உங்களின் (ஈ.பி.ஆர்.எல். எவ்.) கட்சி ஆகியவை பற்றியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இப்போது பேசப்படுகிறது. தமிழரசைப்பொறுத்தவரை விக்கி அக்கட்சியில் இருந்தும், ஸ்ரீகாந்தா தரப்பு ரெலோவில் இருந்தும் வெளியேறியவர்கள். ஆகவே அவர்கள் அந்தந்தக்கட்சிகளில்வந்துமீளஇணைந்து கொள்ளலாம் என்பது தமிழரசின் நிலைப்பாடு. உங்கள் கட்சியை - ஈ.பி.ஆர்.எல். எவ்வை - பொறுத்தவரை ஏற்கனவே கூட்டமைப்பின் ஸ்தாபக கட்சியில் அது ஒன்று. அந்த வகையில் அந்த கட்சி மீண்டும் கூட்டமைப்பில் வந்து இணைந்து கொள்ளலாம். அதற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்ற நிலைப்பாட்டை தமிழரசும் கூட்டமைப்பின் மற்றைய இரு கட்சிகளும் எடுத்தால் உங்கள் முடிவு எப்படியாக இருக்கும்?" - என்று நான் சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் கேட்டேன்.

சுரேஷின் கட்சியுடன் கூட்டமைத்திருக்கும் விக்கி மற்றும் ஸ்ரீகாந்தாவின் கட்சிகளிலிருந்து சுரேஷ் தரப்பைப் பிரித்துக் காய் நகர்த்தும் திட்டம் போன்றதாக என் கேள்வி அமைந்தது.

எந்தவித தாமதமுமின்றி, திடமாகவும், சடார் எனவும், உறுதியாகவும் பதில் கூறினார் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

"நாங்கள் இப்போது தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்ற கூட்டமைப்பை அமைத்து இயங்கி வருகிறோம். அதில் மூன்று கட்சிகள் உள்ளன. எங்களுக்குள் யார் பெரிது, யார் சிறிது என்ற வித்தியாசம் ஏதும் இல்லை. எல்லாம் சமதரப்புகள். எந்த விடயம் என்றாலும் அந்த கூட்டணியைக் கூட்டி அவர்களுடனான ஆலோசனையின் பின்னர்தான் எந்த முடிவையும் எடுத்து அறிவிப்பேன்" - என்று மிக உறுதியாகக் கூறினார் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

தம் கட்சி நலன் சாராமல், தன் கூட்டமைப்பு பற்றி உறுதியாக கூறிய அவரின் பதில் எனக்கு அப்போது வியப்பைத் தந்தது. ஆனாலும் பிரசுரத்துக்கு அல்ல என்று பீடிகையோடு பெறப்பட்ட தகவல் என்பதால் அது பற்றி நான் எதுவும் எழுதவில்லை.

ஆனால் நேற்று அந்தக் கூட்டமைப்பில் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ்வையும், தமிழ்த் தேசியக் கட்சியையும் பொருட்படுத்தாது, தம்பாட்டில் முடிவெடுத்து வெளியேறிய விக்னேஸ்வரனைப் பற்றிய மக்களின் கருத்து நிலையை அவர்கள் ஒரு தடவை உரசிப் பார்த்துக்கொள்வதற்காக அந்த கலந்துரையாடலின் கருத்தியலை - சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு அளித்த வாக்குறுதியை மீறி, இன்று வரைகிறேன் - கட்சித் தலைவர்கள் எத்தகையவர்கள் என்பதை மக்கள் எடை போடுவதற்காக....!

- மின்னல் -

## என்னை வெறும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்து கட்சிகளின் கூட்டணியாக நாம் பேச்சுவார்த்தையை ஆரம்பித்த போது இன்றைய கூட்டத்தில் எமக்குத் தெரியாமல் திடீரென புதிதாக ஜனநாயக போராளிகள் கட்சியை அழைத்து வந்திருந்தனர்.

ஜனநாயகப் போராளிகள் கட்சி பல்வேறு குழுக்களுடன் தொடர்புடையதாக நான் அறிந்தேன். புலிகளோடு இருக்கும் போது அவர்கள் எப்படி இருந்தார்கள் என்றும், தற்போது அவர்கள் எப்படி இருக்கின்றார்கள் என்பதனையும் நாம் அறிய வேண்டும்.

அவர்களை ஆறாவது கட்சியாக கூட்டணிக்குள் இணைக்கும் முடிவை ரெலோ, புளொட் தன்னிச்சையாக எடுத்தார்கள். ஆனால், நாம் அதனை ஏற்றுக் கொண்டோம்.

கூட்டணியின் பெயராக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி என கட்சியின் பெயரை தெரிவித்து அதனை தமிழ் தேசியக் கூட்டமைப்பாக செயல்படுவதாக முடிவு எடுக்கப்பட்டது.

மேலும் கூட்டணியின் தலைமைப் பதவியினை விட்டுக் கொடுத்திருந்தோம். எனினும் சின்னம் அல்லது கட்சிச் செயலாளர் பதவியையாவது எமது கட்சிக்கு தருமாறு கோரினோம். அவர்கள் அதற்கு மறுத்ததால் நாம் கூட்டத்தில் இருந்து வெளியேறினோம்.

2008 ஆம் ஆண்டிலே குத்துவிளக்குச் சின்னத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் செயற்படுத்துவதாக தெரிவித்திருந்தனர்.

தமிழரசுக் கட்சி விலகியிருக்கும் தருணம். ஏனைய கட்சிகள் இணைந்துள்ளமையால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் தொடர்ந்தும் பயணிப்போம் என்றனர்.

எங்களுடைய கட்சியின் சின்னத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும்எனக்கோரிக்கை விடுத்த தருணம் அதற்கும் மறுப்பளித்து விட்டனர். தேர்தல் காலங்களில் செயலாளர் பதவியே பொறுப்பு வாய்ந்த பதவியாக காணப்படுவதால் அதனை நாம் கோரிய போதும் அதனையும் மறுத்து விட்டனர்.

ஏற்கனவே அனைத்து திட்டங்களையும் நன்கு வகுத்துவிட்டு என்னை அந்தக் கூட்டணியில் பொம்மை போல் நடத்த முயன்றது வெளிப்படையாகத் தெரிந்தது.

இந்த விடயம் மணிவண்ணனுக்கும் நன்கு தெரிந்த விடயம். நேற்றும் முல்லைத்தீவில் முன்னாள் போராளி ஒருவர் உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த நிலையில் நான் நேரில் சென்று அனைத்து கட்சிகளும் ஒருங்கிணைந்து பயணிப்பது தொடர்பாக உறுதியளித்திருந்தேன்.

இந் நிலையில் ஜனநாயகப் போராளிகள் பல குழுக்களுடனும் கட்சிகளுடனும் கூட்டு வைத்திருக்கின்றனர் என வரும் பல செய்திகளை நான் அறிந்தேன். ஆனால் நான் போராளிகளுக்கு எதிரானவன் அல்லன். எம் கட்சியிலும் முன்னாள் போராளிகள் பலர் இருக்கின்றனர். இவ்வாறான காரணங்களால் தான் நாம் வெளியேறவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது.

கட்சியின் சின்னத்தையோ செயலாளர் பதவியையோ தரும் சந்தர்ப்பத்தில் தொடர்ந்தும் அவர்களுடன் இணைந்து பயணிக்க எதிர்பார்க்கின்றேன்.

எது, எவ்வாறு இருப்பினும் நான் தொடர்ந்தும் அவர்களுடன் இணைய எதிர்பார்க்கவில்லை.

எமது கட்சியில் பல இளைஞர்கள் இணைய முன்வந்துள்ளனர்.

ஏனைய கட்சிகள் எம்முடன் இணைய தயாராகும் போது அது தொடர்பில் நன்கு பரிசீலிக்கப்படும். உள்ளூராட்சித் தேர்தலில் மான் சின்னத்தில் போட்டியிடுவதற்கு உறுதியாக உள்ளோம். - என்றார்

## ஜனநாயகத் தமிழ்த் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய தமிழ்த்தேசியக் கட்சிகள் இடையே புதிய கூட்டு ஒன்றை அமைக்கும் முயற்சியின் போது நேற்று தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் அவரது கட்சியில் சில தினங்களுக்கு முன்னர் இணைந்த யாழ். மாநகர முன்னாள் மேயர் மணிவண்ணன் ஆகிய இருவரும் இடைநடுவில் வெளியேறினர் என்பது தெரிந்ததே.

செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான ரெலோ, சித்தார்த்தன் தலைமையிலான புளொட், சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஸ்ரீகாந்தா தலைமையிலான தமிழ்த் தேசியக் கட்சி மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியவை இன்று காலை கூடி தங்களின் புதிய கூட்டுக் குறித்து அறிவிப்பார்கள் எனத் தெரிகிறது.

புளொட் அமைப்பு பிறிதொரு கட்சியோடு சேர்ந்து நீண்ட காலமாக பதிவில் வைத்திருக்கும் குத்துவிளக்குச் சின்னத்துடனான ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்ற பெயரை இந்த ஐந்து கட்சிகளும் சேர்ந்து பயன்படுத்த இப்போது தீர்மானித்திருக்கின்றன எனத் தெரிகிறது.

புளொட் அமைப்பின் பிரமுகர் ஆர்.ராகவன்(ஆர்.ஆர்.) இதன் செயலாளராகப் பதிவு செய்யப்பட்டுள்ளார்.

புதிய கூட்டின் உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்று இடம்பெறும் என்றாலும், இக்கூட்டின் சார்பில் மாவட்டங்கள் தோறும் தேர்தலைக் கையாளும் இந்த கூட்டின் நிர்வாகிகள் பெயர்கள் நேற்று சம்பந்தப்பட்ட தெர்வத்தாட்சி அலுவலர்களுக்கு, கூட்டின் செயலாளர் ஆர்.ராகவனினால் ஏற்கனவே ஒப்பமிட்டு அனுப்பப்பட்டு விட்டன என்று தெரிகிறது.

## திட்டமிட்டபடி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழு இந்த விடயத்தை உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான ஏற்பாடுகளை செல்லுபடியாகாத வகையில் உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர் எஸ்.துரைராஜா மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திட்டமிட்டு நடத்தப்படும் என தேசியத் தேர்தலுக்காக ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் உயர் நீதிமன்றில் அறிவித்துள்ளார்.

## விக்கி தரப்பை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முழுமூச்சாக நடைபெற்றதாக அறியவந்தது.

பிரேரிக்கப்பட்ட சமரசத் திட்டத்திற்கு இணங்கும் நிலைமை தரப்புகளுக்கு இடையே இருந்தாலும், அதனை ஏற்படுத்துவதற்கான சாத்தியங்கள் அடியோடு இல்லை என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழ் தேசிய மக்கள் கூட்டணி என்று பெயர் மாற்றம் பெற்று மீன் சின்னத்துடன் இருக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் மீன் சின்னத்தை புதிய கூட்டின் சின்னமாக அறிவிக்கவும், அதன் பொதுச் செயலா

(11ஆம் பக்கம் பார்க்க)






காலைக்கதிர் Kalaikkathir

# தம்மிடம் உள்ள தீர்வுத் திட்டத்தை சரியான நேரத்தில் மக்களுக்கு வெளிப்படுத்துவோம் என்கிறது கூட்டணி

தம்மிடம் தீர்வு திட்டம் உள்ளதாகவும் அதனை சரியான நேரத்தில் மக்களுக்குத்தெரிவிப்போம்எனதமிழர் விடுதலைக் கூட்டணி தெரிவித்துள்ளது.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் மத்திய குழு கூட்டம் வவுனியாவில் கட்சியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் இடம்பெற்றது.

இதன்பின்னர்ஊடகங்களுக்குகருத்து தெரிவித்த கட்சியின் ஊடக பேச்சாளர் அருண் தம்பிமுத்து இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் –

தமிழர் விடுதலைக்கூட்டணி தாயகப் பிரதேசத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் தனித்து போட்டியிடவுள்ளோம். எம்மோடு இணைந்து செயற்பட்ட அனைவரும் மீண்டும் வர வேண்டும் அதற்காக அனைவரையும் வரவேற்கின்றோம்.

பொருளாதார நெருக்கடியான காலத்திலே உள்ளூராட்சி மன்றங்களை ஒரு மித்த கருத்தோடு சரியான முறையில் கொண்டு செல்ல வேண்டிய தேவையுள்ளது. எனவே அனைவரையும் வருவேற்கின்றோம். பலதசாப்தங்களுக்குப்பின்னர் ஜனநாயக முறையிலான உள்ளூராட்சி தேர்தல் நடைபெறவுள்ளது. மக்கள் இந்த கடினமான காலத்திலும் கூட பங்குபெற வேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்கள் பல கட்சிகளைக் கொண்டு அமைந்தாலும் கூட மக்களுக்கான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். இது மாகாணசபை மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் அல்ல. உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி தனியாகபோட்டியிடப்போகின்றது. ஆனால் அனைவருடனும் இணைந்து வேலை செய்வோம்.

பல சபைகளில் நாங்களே ஆட்சி அமைத்தாலும் கூட அனைவரையும் உள்வாங்கி ஒருமித்து செயற்படுவதுவே நோக்கமாக இருக்கின்றது. தமிழ்க் கட்சிகள் ஒன்றாக போட்டியிடப்போகின்றன. தனித் தனியாக போட்டியிடப்போகின்றன. எல்லாம் அரசியலுக்காக ஒவ்வொரு கட்சிகளும் தமது முடிவுகளை எடுக்கின்றனர்.

நாம் மற்ற கட்சிகளின் முடிவுகளைப் பற்றி சிந்திக்கவில்லை. தமிழர் விடுதலைக்கூட்டணிக்கென்று தெளிவான கருத்து இருக்கின்றது. தெளிவான கொள்கை இருக்கின்றது. நாம் பல வருடங்களின் பின்னர் கட்சியை மீள் கட்டமைத்து முன்சென்றுகொண்டிருக்கின்றோம். எனவே ஏனைய கட்சிகளின் கூட்டணியோடில்லாமல் நாம் தனித்து போட்டியிடுவோம்.



தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதைத் தெளிவாகக் கூறி வந்திருக்கின்றோம். வட்டுக்கோட்டை பிரகடனத்தை உருவாக்கிய கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணி. சுதந்திரதினத்துக்கு முன் தீர்வைக் காணுவேன் என ஜனாதிபதி கூறியிருக்கின்றார். அதற்கு இன்னும் சில வாரங்களே உள்ளன.

தமிழ்க் கட்சிகளை அழைத்தபோது தமிழர் விடுதலைக்கூட்டணியை அழைக்கவில்லை. நாடாளுமன்றத்தில் பிரதிநிதிப்படுத்தும் கட்சிகளை மாத்திரமே அழைப்பதாகத் தெரிவித்திருந்தார்கள். ஆனால் தமிழர் பிரச்சினை அவ்வாறான விடயம் அல்ல.

கடந்த காலத்தில் விடுதலைப்புலிகளை விடுத்து பேச்சு நடத்துவோம் எனத் தெரிவித்தனர். அதனால் ஏற்படும் பயன் என்ன என்பதை மக்கள் அறிந்திருந்தனர். அதனாலேயே பல பேச்சுகள் அந்தக் காலத்தில் வெற்றி பெறவில்லை. அதைப்போல் பேச்சுக்கு நாம் சிலரை அழைக்கின்றோம். நீங்கள் ஒன்றாக வாருங்கள் என்ற நாடகங்களை நடத்துவது அர்த்தமற்ற செயல். எம்மிடம் தீர்வு திட்டமும் உள்ளது. அது என்ன என்பதை சரியான வேளையில் மக்களுக்குத் தெரிவிப்போம். அத்துடன் இலங்கையில் உள்ள அனைத்து கட்சிகளுடனும் பேச்சு நடத்தவும் தயாராக உள்ளோம். – எனத் தெரிவித்தார்.

# மக்களை முழுமையாக அழிக்கும் வகையில் அரசின் செயல்பாடுகள்!

## முருந்தெட்டுவே ஆனந்த தேரர் காட்டம்



தவறான ஆலோசனைகளுக்கு அமைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டால் கோட்டாபய ராஜபக்ஷவிற்கு நேர்ந்த கதியே அவருக்கும் ஏற்படும்.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களை முழுமையாக அழிக்கும் வகையில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் காணப்படுகின்றன என அபயராம விகாரையின் விகாராதிபதிமுருந்தெட்டுவேஆனந்த தேரர் தெரிவித்தார்.

நாரஹேன்பிடியவில் உள்ள அபயாராமவிகாரையில்இடம்பெற்றஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர்மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

முறைமை மாற்றத்தின் ஊடாக அரச நிர்வாகத்தை முன்னெடுக்க முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

இருப்பினும் அவரை சூழ்ந்திருந்த தரப்பினர் அவரைத் தவறாக வழிநடத்தி முழு நாட்டுக்கும் பாரிய விளைவுகளை ஏற்படுத்தினார்கள்.

நாடு அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் பாரிய நெருக்கடியை எதிர்கொண்ட போது எவரும் அரசாங்கத்தைப் பொறுப்பேற்க முன்வரவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்து சவால்களையும் ஏற்று பொறுப்பேற்றார். பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

தவறான ஆலோசனைகளுக்கு அமைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டால் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு நேர்ந்த கதியே அவருக்கும் நேரிடும் என்பதில் எந்த மாற்றமும் கிடையாது.

அரசாங்கத்தின் ஒருசில தீர்மானங்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களை முழுமையாக அழிக்கும் வகையில் காணப்படுகின்றன.

நெருக்கடியான சூழ்நிலையில் அரச செலவுகளைக் குறைத்து மக்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக அரசாங்கம் செயற்பட வேண்டும்.

நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ள பின்னணியில் 38 இராஜாங்க அமைச்சுக்கள் அவசியமற்றவை. ஆகவே மக்களுக்கான நலன்புரி சேவைகளை மட்டப்படுத்த முன்னர் வீண் செலவுகளை அரசாங்கம் முதலில் குறைத்துக் கொள்ள வேண்டும். – என்றார்.

# தங்கத்துக்குப் பதிலாக பித்தளையில் தாலி செய்து வழங்கியவர் யாழ்ப்பாணத்தில் கைது!

தங்கத்துக்குப் பதிலாக பித்தளையில் தாலி மற்றும் கொடி செய்து கொடுத்து மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர் காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது –

கடந்த 2016 ஆம் ஆண்டு தாலி மற்றும் அதற்கான கொடி என்பவற்றை ஐந்தரை பவுணில் செய்வதற்கு, சந்தேக நபரிடம் பணம் கொடுத்து , தாலி மற்றும் கொடியை செய்து பெற்றுக்கொண்டுள்ளனர்.

7 வருடங்களின் பின்னர் கடந்த சில தினங்களுக்கு முன்னரே தமது தாலி மற்றும் கொடி என்பவை தங்கம் அல்ல பித்தளை என்பதைக் கண்டறிந்துள்ளனர்.

அது தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் சந்தேக நபர் தலை மறைவாகி இருந்தார்.

இந்நிலையில் காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினர் தலைமறைவாகி இருந்த சந்தேக நபரை கைது செய்து, மேலதிக விசாரணைக்காக தெல்லிப்பழை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அதேவேளை யாழில் கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் தங்கத்திற்கு பதிலாக பித்தளையில் தாலி மற்றும் கொடி செய்து கொடுத்து ஏமாற்றிய சம்பவம் ஒன்று பதிவாகி இருந்தது.

இந்துக்களின் திருமணங்களின் போது, தாலி மற்றும் கொடி என்பவை திருமணத்துக்கு ஓரிரு நாள்களுக்கு முன்னர் 'பொன் உருக்கு' என நிகழ்வு ஏற்பாடு செய்து, தாலிக்கொடி செய்து கொள்வார்கள். அத்துடன் தாலிக்கொடி வணக்கத்துக்கு உரியதாகவும், மரியாதைக்கு உரியதாகவும் பார்க்கின்ற வழக்கமும் உண்டு. அதனால் அவற்றை தங்கம் தானா ? என சோதனை செய்து பார்க்கும் வழக்கம் இருப்பதில்லை. பொருளாதார நெருக்கடிகளால் அடகு வைப்பதற்காகவோ அல்லது பாதுகாப்பாக வைத்திருப்பதற்காகவோ வங்கிகளுக்கு கொண்டு செல்லும் போதே அங்கு தாலி மற்றும் கொடியின் தரம் சோதிக்கும் போதே ,அவற்றில் மோசடிகள் இடம் பெற்று இருந்தால் தெரியவரும் சூழல் காணப்படும்.

# மாடு திருட்டுக் குற்றத்தில் யாழில் இளைஞர் கைது!

யாழ்ப்பாணம் இருபாலை பகுதிகளில் மாடுகளைத் திருடி விற்பனை செய்து வந்த சந்தேகத்தில் நபர் ஒருவரை கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கல்வியங்காட்டு பகுதியை சேர்ந்த 24 வயதுடைய இளைஞனொருவரே கைது செய்யப்பட்டுள்ளார். இருபாலை பகுதியில் உள்ள வீடொன்றினுள் கட்டி வைக்கப்பட்டிருந்த மாடுகள் திருடப்பட்டு இருந்தன. அது தொடர்பில் உரிமையாளரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு இருந்தது.

இந்நிலையில் திருடப்பட்ட மாடுகளை வேறு ஒரு நபருக்கு விற்க முயன்ற போது மாடுகளின் உரிமையாளரால் மாடுகள் அடையாளம் காணப்பட்டு, அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

அதனை அடுத்து அங்கு விரைந்த பொலிஸார் மாடுகளைத் திருடிய குற்றத்தில் இளைஞனைக் கைது செய்ததுடன், மாடுகளையும் மீட்டுள்ளனர் .

கோப்பாய் , இருபாலை , கல்வியங்காடு பகுதிகளில் இடம்பெற்ற மாட்டுதிருட்டு சம்பவங்களுடன் சந்தேக நபருக்கு தொடர்புகள் இருக்கின்றன எனவும் , அது தொடர்பில் தாம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# சுதந்திரதின நிகழ்வுகளுக்கு 20 கோடி ரூபா செலவாகும்!

## அமைச்சர் அசோக பிரியந்த தெரிவிப்பு



இந்த வருட சுதந்திரக் கொண்டாட்டங்களுக்கு 20 கோடி ரூபா செலவாகும் என உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

57 கோடி ரூபாவிற்கும் அதிகமான மதிப்பீடு கிடைத்ததாகவும், ஜனாதிபதி செயலகமும் உள்நாட்டலுவல்கள் அமைச்சும் இணைந்து அவ்வப்போது கலந்துரையாடி 20 கோடியாகக் குறைத்து மேலும் குறைக்க முயற்சிப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திர தின அணிவகுப்பு கொள்ளுப்பிட்டி சந்தியில் இருந்து ஆரம்பமாக வுள்ளதாகவும், கொள்ளுப்பிட்டி சந்தி தொடக்கம் காலி முகத்திடல் வரை மக்கள் அதனைக் கண்டுகளிக்க வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ரணில் மீது சட்டம் பாயாது

"நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியாக விருந்தாலும் சரி , எந்தவிதமான உயர் பதவிகளிலும் இருந்தாலும் சரி, சட்டத்திற்கு எதிராகக் குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றவர்களுக்கு சட்டத்திலிருந்து தப்பிக்க முடியாது என்பதை இந்த உயர் நீதிமன்றத்தின் பிரசித்தி பெற்ற தீர்ப்பு உணர்த்தியுள்ளது. இதனை தற்போதைய ஆட்சியாளர்களும், எதிர்காலத்தில் ஆட்சிக்கு வரவுள்ளவர்களும், அரச அதிகாரிகளும் நன்றாக நினைவில் கொள்ள வேண்டும்." – என்று கொழும்பு மறை மாவட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை கூறியுள்ளார்.

சரியான – யதார்த்தமான – உண்மையான – கூற்று இது.

2019 ஏப்ரலில் ஈஸ்டர் ஞாயிறன்று இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட 12 அடிப்படை உரிமை மீறல் வழக்குகளின் மீது நேற்று முன்தினம் உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை ஒட்டி இந்த கருத்தியலை அவர் வெளியிட்டுள்ளார்.

இது சரிதான். நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக இருப்பவருக்கு பதவியில் இருக்கும் வரைத்தான் சட்டம் அவர் மீது பாயாது என்ற காப்புரிமை. அந்தப் பதவியை விட்டு அவர் இறங்கியதும், அவர் பதவிக் காலத்தில் இழைத்த தவறுக்கும் சேர்ந்து சட்டம் அவர் மீது பாயும் என்பதைத்தான் நேற்று முன்தினம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு எடுத்துக்காட்டி உள்ளது.

இப்போதும் கூட, இதே வழக்கில் தற்சமயம் ஜனாதிபதியாக இருக்கும் ரணிலுக்குக் காப்புரிமை தந்திருக்கின்றது சட்டம்.

அவர் பதவியை விட்டு இறங்கியதும், 2019 ஈஸ்டர் குண்டு தாக்குதலைத் தடுக்கும் விவகாரத்தில் அப்போதைய பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவின் பங்கு பணி, பொறுப்பு, தவறு ஏதும் இழைக்கப்பட்டதா என்ற விடயங்கள் நீதிமன்றச் சோதனைக்கு – கேள்விக்கு – உள்ளாக்கப்பட முடியும் என்பதுதான் நிலைமை.

எனினும் இந்தத் தொடர் குண்டுத் தாக்குதல் நடந்த சமயம் பாதுகாப்புப் பொறுப்பு ஏதும் பிரதமர் என்ற முறையில் ரணிலுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. தேசியப் பாதுகாப்புச் சபையின் கூட்டத்திற்குக் கூட, அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கடும் உத்தரவு காரணமாக அவர் அழைக்கப்படாமல் ஒதுக்கப்பட்டு இருந்தார். ஆதலால் ரணில் விக்ரமசிங்க இப்போதைய ஜனாதிபதி பதவியை இழந்த பின்னர் கூட இது போன்ற – மைத்திரிபால சிறிசேனவிக்கு வழங்கப்பட்டமை போன்ற – இழப்பீட்டுத் தொகையைச் செலுத்த வேண்டிய தண்டனைக்கு உட்பட மாட்டார், அதற்கு வாய்ப்பில்லை என்கின்றன சட்ட வட்டாரங்கள்.

## இலங்கையில் இதுவரை புதிய கொரோனா திரிவுகள் அடையாளம் காணப்படவில்லை!

### சோதனைகள் தீவிரம் என்கிறது சுகாதார அமைச்சு

உலகின் சில நாடுகளில் புதிய கொரோனா திரிவு அடையாளம் காணப்பட்டுள்ளதைத் தொடர்ந்து இலங்கையில் புதிய திரிவுகள் உள்ளனவா என்பதைக் கண்டறிவதற்கான மரபணுவரிசை முறை சோதனையை இலங்கை ஆரம்பித்துள்ளது என சுகாதாரத் துறை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

பத்தாம் திகதி முதல் நாங்கள் மரபணு வரிசை முறை சோதனையை ஆரம்பித்துள்ளோம். இதன் முடிவுகள் 20 ஆம் திகதி தெரியவரும் என சண்டிம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

இந்தத் தரவுகளை சுகாதார அமைச்சிடம் பகிர்ந்துகொள்வோம் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஏற்கனவே முன்னெடுத்துள்ள இவ்வாறான சோதனைகளை தீவிரப்படுத்தவுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவு இதுவரை புதிய திரிவுகள் எவற்றையும் இலங்கையில் அடையாளம் காணவில்லை எனவும் தெரிவித்துள்ளது. இலங்கையில் இதுவரை புதிய கொரோனாத் திரிவு எதனையும் அடையாளம் காணவில்லை என சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவின் தலைமை நிபுணர் சமித்த கினிகே தெரிவித்துள்ளார்.

## தினேஸ் சாப்டர் விவகாரத்தில் பொலிஸாருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நிராகரித்தார் பொலிஸ் பேச்சாளர்!

பிரபல வர்த்தகர் தினேஸ் சாப்டர் மரணம் தொடர்பாகப் பொலிஸாருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை பொலிஸ் பேச்சாளர் நிராகரித்துள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கருத்து தெரிவிக்கையில், பிரபல வர்த்தகரின் மரணம் தொடர்பான உண்மைகளை மறைக்குமாறு மறைகரமொன்று பொலிஸாருக்கும் விசாரணையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் இலஞ்சம் வழங்குகின்றது எனத் தெரிவிக்கப்படுவதை பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்டுவ நிராகரித்துள்ளார்.

உண்மையை மறைப்பதற்கு எவராவது முயன்றால் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தினேஸ் சாப்டரின் மரணம் தொடர்பான விசாரணைகள் தொடர்கின்றன பொலிஸார் மாத்திரம் விசாரணைகளை மேற்கொள்ளவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக உண்மையை மறைப்பதற்காக பொலிஸாருக்கு இலஞ்சம் கொடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுவதை நாங்கள் நிராகரிக்கின்றோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



எனினும் இது தொடர்பாக ஏதாவது தகவல் கிடைத்தால் நாங்கள் விசாரணைகளை முன்னெடுப்போம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சுதந்திர தின விழாவில் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றுவார்!

### பிரமித பண்டார தென்னகோன் தெரிவிப்பு



இந்த வருட சுதந்திர தின விழாவில் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்ற மாட்டார் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திர தின விழாவை பெருமையாகவும் குறைந்த செலவிலும் நடத்தும் வகையில் கொண்டாட்டத்தை ஒன்றரை மணிநேரமாக மட்டுப்படுத்துமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார் என இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

'நமோ நமோ மாதா – நூற்றாண்டுக்கு ஒரு படி' என்ற தொனிப்பொருளில் நடைபெறும் இந்த பெருமைமிகு விழாவில், 2048 ஆம் ஆண்டு 100 ஆவது சுதந்திர தினம் வரை மாறாத அரச கொள்கையை அமுல்படுத்தும் வகையில், அடுத்த 25 ஆண்டுகளுக்கு அரசாங்கத்தின் புதிய சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டம் அறிவிக்கப்படவுள்ளது.

தேசிய சுதந்திர தினக்கொண்டாட்டத்தின் பிரதான நிகழ்வு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 04ஆம் திகதி காலை 8.30 மணிக்கு காலி முகத்திடலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

சுதந்திர சதுக்கத்தில் அமைந்துள்ள தேசபிதா டி.எஸ். சேனாநாயக்கவின் உருவச் சிலைக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்திய பின்னர் ஜனாதிபதி செயலக வளாகத்தில் உள்ள தேசிய மாவீரர்களின் உருவச்சிலைகளுக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டதன் பின்னர் வைபவம் ஆரம்பமாகவுள்ளது.

75 ஆவது தேசிய சுதந்திர தின விழாவை முன்னிட்டு நாடு முழுவதும் பல கலாசார மற்றும் சமய நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமையும் விசேட அம்சமாகும்.

## 20 ஆயிரத்து 875 சுற்றுலாப் பயணிகள் இந்த வருட முதல் வாரத்தில் வருகை!

இந்த வருடத்தின் முதல் வாரத்தில் 20 ஆயிரத்து 875 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையால் வெளியிடப்பட்ட தற்காலிக தரவுகளின்படி, பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் ரஷ்யா, இந்தியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளில் இருந்து வந்துள்ளனர். இதற்கமைய, 2023 ஆம் ஆண்டின் முதல் ஏழு நாள்களில் ரஷ்யாவிலிருந்து 5 ஆயிரத்து 926 சுற்றுலாப்பயணிகளும், இந்தியாவில் இருந்து 2 ஆயிரத்து 322 பேரும், ஐக்கிய இராச்சியத்திலிருந்து ஆயிரத்து 571 பேரும், ஜேர்மனியிலிருந்து ஆயிரத்து 515 பேரும் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக ஊழியர்களுக்கு போனஸ் வழங்குவதற்கு நான் நடவடிக்கை எடுப்பேன்

## மனுஷ நாணயக்கார கூறுகிறார்



நட்டத்தில் இயங்கிவரும் அரச நிறுவனங்களின் ஊழியர்களுக்கு வருடாந்த போனஸ் தொகை வழங்கியிருக்கும் நிலையில் இலாபத்தில் இயங்கிவரும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக ஊழியர்களுக்கு போனஸ் வழங்கப்பட வேண்டும்.

அதனால் இதுதொடர்பாக நிதி அமைச்சுடன் கலந்துரையாடி விரைவாக தீர்மானம் எடுப்போம் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

வருடாந்த போனஸ் செலுத்துவது தாமதித்ததன் காரணமாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பாக நேற்று (வெள்ளிக்கிழமை) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

வருட இறுதி போனஸ் செலுத்துவதற்காக இதுவரை அனுமதி கிடைக்காமை காரணமாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் ஏற்பட்ட அமைதியின்மை நிலை ஓரளவு கட்டுப்படுத்திக்கொள்ள முடிந்தது.

குறிப்பாகக் கொரியா உட்பட வெளிநாடுகளில் தொழில் எதிர்பார்ப்புடன் இருப்பவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும் நடவடிக்கையைக் கட்டுப்படுத்த முடியாததால், ஊழியர்களின் புரிதலின் ஊடாகத் தற்காலிகமாக நிலைமையைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியுமாகியது.

அதனால் இவர்களின் பிரச்சினை தொடர்பாக நிதி அமைச்சுடன் கலந்துரையாடி விரைவாகத் தீர்மானம் எடுக்க இருக்கின்றேன்.

பொதுவாக அவர்களுக்கு போனஸ் கிடைக்க வேண்டும். அந்த நிறுவனம் இலாபமீட்டி இருக்கிறது. வருட இலக்கை பூரணப்படுத்தி இருக்கின்றது.

இலாபம் இல்லாமல் அரசாங்கத்தால் நடத்தப்பட்டு வரும் சில நிறுவனங்கள் அந்த ஊழியார்களுக்கு போனஸ் வழங்கி இருக்கும்போது சமத்துவமற்ற முறையில் நடந்துகொண்டமை தொடர்பில் அவர்கள் மத்தியில் சற்று கொந்தளிப்பான நிலைதான் ஏற்பட்டிருந்தது.

என்றாலும் தற்போதைக்கு நிலைமையை ஓரளவு சமரசம் செய்ய முடியுமாகியது. இதுதொடர்பாக நிதி அமைச்சுடன் கலந்துரையாடி இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எதிர்பார்க்கின்றேன்.

இந்த நேரத்தில் வெளிநாடுகளுக்குச் செல்வது தடைப்பாட்டால், கொரியா போன்ற நாடுகளுக்குச் செல்ல இருப்பவர்களின் ஒப்பந்தம் ரத்தாகி வெளிநாட்டுக்கு செல்ல இருக்கும் விடயங்கள் நின்றுவிட்டால், அந்த நிறுவனங்களில் பணிகள் நிறுத்தப்பட்டு அங்கு பாரிய பாதிப்பு மற்றும் நட்டம் ஏற்படுகிறது.

அதனால் இது தொடர்பாக நாங்கள் மிக விரைவாக தீர்மானம் ஒன்றை எடுக்க எதிர்பார்க்கின்றோம். இவர்கள் அரசாங்கத்துக்கு பணம் சம்பாதித்துக் கொடுக்கின்றனர். என்றாலும் இன்னும் தீர்வு கிடைக்கவில்லை. – என்றார்.






## இந்தியாவில் இருந்து எதனோலை இறக்குமதிசெய்ய இலங்கை நாட்டம்

### இந்திய மத்திய அமைச்சர் நிதின் கட்காரி தெரிவிப்பு



இந்தியாவிலிருந்து எதனோலை இறக்குமதி செய்வதற்கு இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகள் பெரிதும் நாட்டம் காண்பித்திருக்கின்றன என இந்தியாவின் வீதிப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் நிதின் கட்காரி தெரிவித்துள்ளார்.

எதனோல் இறக்குமதி தொடர்பில்தாம் இரு நாட்டு அரசாங்கங்களுடனும் கலந்துரையாடியிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் கூறுகையில் –

நான் இந்த விடயம் தொடர்பாக பங்களாதேஷ் பிரதமருடனும் இலங்கை அமைச்சருடனும் கலந்துரையாடி இருக்கிறேன்.

அந்த இருவரும் பெற்றோலுடன் கலப்பதற்கு அவசியமான எதனோலை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கான தமது நாட்டத்தை வெளிப்படுத்தியுள்ளனர். – என்றார்.

புது டில்லியில் நடைபெற்ற உயிரியல் சக்திவலு தொடர்பான மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பில் பிரஸ்தாபித்துள்ளார்.

மேலும், அடுத்த 15 நாள்களில் பெற்றோலிய விவகார அமைச்சர் ஹார்தீப் சிங் பூரியுடன் நடைபெறவிருக்கும் சந்திப்பில் இந்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாட உள்ளதாகவும் இதன்போது அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ்.பல்கலையில் விழிப்புணர்வு!





நேற்று நாடக வடிவில்

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தோடு குரலற்றவர்களின் குரல் அமைப்பினர் இணைந்து வீதி விழிப்புணர்வு நாடகமொன்றை யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றிய கேட்போர் கூட வளாகத் துக்கு முன்பாக நேற்று (வெள்ளிக்கிழமை) நடத்தி யுள்ளனர்.

இதன்போது குரலற்றவர்களின் குரல் அமைப் பின் இணைப்பாளர் முருகையா கோமகன் கூறுகை யில் –

இம்முறை தைப்பொங்கலுக்கு எமது அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என நம்பி யபோதும் நாம் ஏமாற்றப்பட்டுள்ளோம்.

இதனை உணர்த்தும் வகையில் சிறைக் கூண்டு அமைக்கப்பட்டு, சிறையில் உள்ள கைதி களை போல உருவகித்து இந்த நாடகத்தை நடத்தி யிருக்கிறோம்.

பொங்கல் பொருள்கள் வீடுகளில் தயார் நிலை யில் உள்ளபோதும், எமது உறவுகளின்றி இம்முறை யும் பொங்கலை பொங்க முடியாத சூழலை நாம் நாடகமாக நிகழ்த்திக் காட்டியிருந்தோம்.

மேலும், அரசியல் கைதிகள் விடுதலையின்றி வாழும் சூழலில், இங்கு நடைபெறவுள்ள தேசிய பொங்கல் விழாவுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்க வருகை தரும்போது, எமது மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் பிரதிநிதிகள் இந்த நிகழ்வை முற்றாக நிராகரிக்க வேண்டும்.

இதேவேளை எஞ்சியிருக்கும் சிறைக்கைதிக ளான எங்களது உறவுகளும் விடுதலை செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

# தாமரை கோபுரத்தை சேதப்படுத்துபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமாம்!

கொழும்பு, ஜன. 14

கொழும்பில் அமைந்துள்ள தாமரைக் கோபுரத்தை சேதப்படுத்துபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தாமரைக் கோபுர முகாமைத்துவ நிறு வனம் எச்சரித்துள்ளது.

தாமரைக் கோபுரத்தின் கண்காணிப்புர் தளத்தில் பெயர்களை எழுதி சேதப்படுத்திய மூவர் அண் மை யில் கைதுசெய்யப்பட்டனர் என அந்த நிறுவனத் தின் பிரதிநிதி ஒருவர் ஊடகங்களுக்குத் தெரிவித் தார்.

இவ்வாறு சேதப்படுத்தப்படும் போது அவற்றை மீட்டெடுப்பதற்கு பெரிய அளவிலான செலவு ஏற்படும் என்பதால், இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறு பிரதிநிதி மேலும் பொதுமக்களிடம் கேட் டுக்கொண்டார்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# உரலார் கேள்வியும் உலக்கையார் பதிலும்



**1. உரலார் கேள்வி:-** கூட்டமைப்பில் தமிழரசுக்கட்சியுடன் இணைந்திருந்த ‘ரெலோ’ அடைக்கலநாதனும் ‘புளொட்’ சித்தார்த்தனும் தமிழரசுக்கட்சியைத் தனியே செல்லவிட்டு கூட்டமைப்புப் பதாகையுடன் பிரிந்து சென்று விட்டார்களே பார்த்தீர்களா?

**உலக்கையார் பதில்:-** கீழ் கண்ட கேள்விகள் மனதில் உதிக்கின்றன.

⁎ எப்போது அவர்கள் சேர்ந்திருந்தார்கள் என்பது முதல் கேள்வி? (மனதால்)

⁎ இப்போதும் தாங்களாய்ப் பிரிந்து சென்றார்களா? பிரிந்து செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டார்களா? என்பது அடுத்த கேள்வி.

⁎ தனித்து நின்று பார்க்கலாம் என்ற துணிவை தமிழரசுக்கட்சிக்கு உபகரித்தவர் யார்? என்பது மற்றொரு கேள்வி.

⁎ வேடிக்கை மனிதர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் புதிய கூட்டமைப்பு எவ்வளவு காலம் நிலைக்கப்போகிறது? என்பது இன்னொரு கேள்வி.

⁎ புதிய கூட்டமைப்பில் இணைந்திருக்கும் ‘படித்தமனிதர்’, இந்த அமைப்பிற்கேனும் துரோகம் செய்யாமல் விசுவாசமாய் இருப்பாரா? என்பது பயமுறுத்தும் கேள்வி. (இப்பத்தி எழுதப்பட்ட பின்னர் நேற்றுப் பிற்பகல் இக்கேள்வியின் நியாயம் உடனடியாகவே நிரூபணமாகிவிட்டது. ஆ - ர்.)

⁎ தமிழ்மக்கள் ‘இத்தகைய கொள்கைப் பிடிப்பாளர்களை’ (?) நம்பி இன்னும் எத்தனை காலம் ஏமாறப்போகிறார்கள்? என்பதுதான் எஞ்சியிருக்கும் மிகப்பெரிய கேள்வி.

**சல்லடையாரின் சலிப்பு ⁎ நாசமாப் போச்சுங்கோ. தேர்தல் வந்ததுந்தான் இவையளுடைய உண்மை முகங்கள் வெளிவருதாக்கும். உருப்பட்ட மாதிரித்தான்...!**

**2. உரலார் கேள்வி:-** முன்பு திருமதி சந்திரிக்கா அவர்கள் ஜனாதிபதியாய் இருந்த காலத்தில் 13ஆவது திருத்தச் சட்டத்தினை ‘நாம் தும்புத்தடியால் கூடத் தொடமாட்டோம்’ (We will not touch the 13th amendment even with the broomstick) என்று சம்பந்தர் ஐயா சொன்னார். இப்போது அவரும், அவரது சகாக்களும் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு நம் அரசினை வலியுறுத்துமாறு இந்தியாவிடம் கோரி நிற்கிறார்கள். இதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**உலக்கையார் பதில்:-** சம்பந்தன் ஐயாவுக்கு, ‘தும்புத்தடி’ இப்போது ‘முள்ளுக்கரண்டி’யாக மாறிவிட்டது. அதை வைத்து 13 ஆம் திருத்தச்சட்டத்தை அள்ளி, அள்ளிச் சாப்பிடுவதற்கு அவரும், அவரது சகாக்களும் தயாராக இருக்கிறார்கள்.

தீர்க்கதரிசனமில்லாமல் பேசியதால் வந்த விளைவு இது. இந்தியாவை ஒதுக்கிவிட்டு நம்மால் எதுவும் செய்ய முடியாது என்ற யதார்த்த உண்மையைக் கூட விளங்க முடியாமல்த்தான் சம்பந்தன் ஐயா அன்று அப்படிப் பேசியிருக்கிறார்.

ஓர் இனத்திற்குத் தலைமை தாங்குகிறவர்கள், நூறு, இருநூறு ஆண்டுகளுக்கு அப்பாலும் நடக்கக்கூடியவற்றைச் சிந்தித்து இயங்கும், தீர்க்கதரிசனம் உள்ளவர்களாக இருக்கவேண்டும். எங்கள் தலைவர்களிடம் இரண்டு, மூன்று ஆண்டுகளைக் கடந்ததான தீர்க்கதரிசனம் கூட இல்லாதது வெட்கக்கேடு. இப்படிப்பட்டவர்கள் எப்படி நம் இனத்தை வழிநடத்தப் போகிறார்கள்? மொழியாற்றல் இருக்கிறது என்பதற்காக அழகான வசனங்களைப் பேசுவதால் மட்டும் தலைவர்களுக்குப் பெருமை வராது. அந்த வசனங்களுக்குள் இனத்தை




உயர்த்துகின்ற உண்மையும் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் இப்படித்தான் மானம் கெடவேண்டி வரும்.

நாடாளுமன்றத்தில் ஆங்கிலத்தில் வெளுத்து வாங்கும் சாணக்கியனும், கஜேந்திரக்குமாரும் கூட இந்த உண்மையைப் புரிந்து கொள்வது நல்லது.

**சல்லடையாரின் சலிப்பு ⁎ என்னத்தைச் சொல்ல? இனம் உருப்பட்டமாதிரித்தான். பாவம், உலக்கையார் நம் தலைவர்களிடம் அதிகம் எதிர்பார்க்கிறார் போல. அவர்களுக்காவது தீர்க்க தரிசனம் வருவதாவது.**

**3. உரலார் கேள்வி:-** என்ன? அடிக்கடி பா.ஜ.க கட்சியைச் சார்ந்தவர்களைப் பாராட்டி எழுதுகிறீர்கள். உங்களை பா.ஜ.க. கட்சியின் ஆதரவாளன் என்றும், திராவிடக்கழகங்களின் எதிர்ப்பாளன் என்றும் இங்கு சிலர் சொல்கிறார்களே. அது உண்மையா?

**உலக்கையார் பதில்:-** என்னே இவர்களின் கற்பனை! இக்கட்சிகளை நான் ஆதரிப்பதாலோ, எதிர்ப்பதாலோ அவர்களுக்கோ, எனக்கோ ஆகப் போவது ஒன்றுமில்லை. உண்மையைச் சொல்லப்போனால், எனக்கு இவர்களில் யார் மீதும் பற்றும் இல்லை, பகையும் இல்லை. எங்கள் நாட்டிலேயே நான் எந்தக் கட்சியினதும் சார்புபட்டவன் அல்லன். அங்கு சார்புபட்டு என்ன செய்யப் போகிறேன்?

நல்லதைக் கண்டு பாராட்டினாலோ தீயதைக் கண்டு கண்டித்தாலோ, நான் குறித்த கட்சிகளின் ஆதரவாளன் என்றும், பகைவன் என்றும் முத்திரை குத்தப் பார்க்கிறார்கள். அதைவிட ஓர் அறியாமை உண்டா? வால் அறுந்த நரி, மற்றைய நரிகளையும் வால் அறுக்கச் செய்ய முயன்றாற்போல, அணிசார்ந்து நிற்பவர்கள் என்னையும் அணிசாரச் செய்யப்பார்க்கிறார்கள். இந்த வலைகளுக்குள் எல்லாம் நான் அகப்படமாட்டேன்!

எம்.ஜி.ஆர்., கலைஞர், எடப்பாடி பழனிச்சாமி என திராவிடர் கழகங்களைச் சார்ந்த பல முதலமைச்சர்களும், அவர்களைத் தவிரவும் முன்னாள் இந்திய மத்திய அமைச்சர் ஜெகத்ரட்சகன் அவர்கள் என் வளர்ச்சியில் தொடர்ந்து அக்கறை காட்டி வருபவர். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மூத்த அமைச்சர் துரைமுருகன் அவர்கள் என்மேல் அன்பும் மதிப்பும் கொண்டு, நான் சொல்லும் திருக்குறள் தொடர்பான புதிய செய்திகளை ஆர்வத்துடன் கேட்டு மகிழ்வார். அதுபோலவே எம்.ஜி.ஆர். ஆட்சியில் அமைச்சராக இருந்த ‘அருளாளர்’ ஆர்.எம்.வீரப்பன் அவர்கள் என்னைப் போற்றி மகிழும் ஒருவர். தற்போதைய தமிழ்நாட்டு முதலமைச்சர் ஸ்டாலின் கூட, மதிப்பளித்து எனக்கு மரியாதை செய்திருக்கிறார். இப்படியாய் திராவிடக் கழகங்களைச் சேர்ந்த இத்தனை தலைவர்களும் என்மேல் அன்பு செய்திருக்க, நான் எப்படி திராவிடக் கழகங்களின் எதிரியாக முடியும்?


இவர்கள் என்று மட்டுமல்லாமல், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மூப்பனார் தொடங்கி, பாரதீய ஜனதாக் கட்சியைச் சேர்ந்த மூத்த தலைவர்களில் ஒருவரான, இல.கணேசன் வரை என்மேல் அன்பைப் பொழிந்திருக்கின்றனர். அதுமட்டுமல்லாமல் தற்போது தமிழ்நாட்டு அரசியலைக் கலக்கியடித்துவரும் அண்ணாமலையார் கூட, இலங்கை விஜயத்தின்போது, என்னை மதித்து வந்து சந்தித்தார்.

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலைக்கதிர் Kalaikkathir

# ஜூலை 9 எழுச்சி இலங்கையின் சகல மக்களை இனவேறுபாட்டுக்கு அப்பால் ஐக்கியப்படுத்தியது

## புக்கர் பரிசு வென்ற எழுத்தாளர் கருத்து



ஜூலை 9 மக்கள் எழுச்சி இலங்கை மக்களை இன வேறுபாட்டுக்கு அப்பால் ஒன்றிணைத்தது என புக்கர் பரிசை வென்ற செஹான் கருணதிலக தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஜூலை 9 ஆம் திகதி இலங்கையில் காணப்பட்ட எழுச்சி, முழுநாட்டையும் இனங்கள் தலைமுறைகள் அரசியல் கருத்துக்களுக்கு அப்பால் ஒன்றிணைத்தது. இதன் காரணமாக இந்த மக்கள் எழுச்சி வியக்கத்தக்கது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ராஜபக்ஷ குடும்பத்தை அதிகாரத்திலிருந்து அகற்றிய மக்கள் எழுச்சியில் சாதகமான விடயங்கள் பல உள்ளன எனத் தெரிவித்துள்ள அவர், இலங்கையின் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதற்கு புதிய தலைஷ்முறைத் தலைவர்கள் உருவாகுவார்கள் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மக்கள் எழுச்சி இடம்பெற்ற தருணத்தைப் பூதாகாரமாக சித்திரிப்பதற்கான முயற்சி இடம்பெற்றாலும் அது உண்மையில் அழகான தருணம் எனக் குறிப்பிட்டுள்ள செகான் கருணதிலக அந்தத் தருணம் தொடர்பில் பல சொல்லாடல்கள் உள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அது ஒரு பேரியக்கம் ஜூலை 9 ஆம் திகதி இனங்கள், தலைமுறைகள் அரசியல் கருத்துக்களுக்கு அப்பால் ஒன்றிணைந்தது அது அற்புதமான விடயம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த இயக்கத்தின் சாதகதன்மை தொடர்பாகக் கேள்வி எழுப்பியவேளையே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

பலதசாப்தங்களாக இனமோதலைச் சந்தித்த நாட்டால் ஒன்றிணைய முடியும். ஒருவரையொருவர் பார்த்துக்கொள்ள முடியும் என்பதை இந்த மக்கள் இயக்கம் காண்பித்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சில சம்பவங்கள் இடம்பெற்றன. ஆனால் பெருமளவிற்கு அமைதியாகவே காணப்பட்டது. இது சாதகமான இயக்கம். இதனை எங்களின் எதிர்காலத்தை நோக்கி பயன்படுத்தலாம் என நினைக்கின்றேன் எனவும் புக்கர் பரிசுபெற்ற எழுத்தாளர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் மக்கள் இயக்கத்தால் சிங்களவர்களும் தமிழர்களும் தங்கள் பேதங்களை மறக்கும் நிலையை ஐக்கியப்படும் நிலையை ஏற்படுத்த முடியுமா என்ற கேள்விக்கு இளம் தலைமுறையினர் தங்கள் போராட்டத்தின் மூலம் ஒன்றிணைந்தார்கள். ஆனால் இன மோதலால் பாதிக்கப்பட்ட பலர் உள்ளனர். அவர்களின் காயம் ஆறவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனது தலைமுறையினருக்குக் காணப்பட்ட வேறுபாடுகள் இந்த இளம் தலைமுறையிடம் இருக்கவில்லை என்பதை நான் பார்த்தேன். இளைஞர்கள் எவ்வாறு ஐக்கியப்பட்டு போராடினார்கள். அவர்கள் இனவேறுபாடுகளுக்கு அப்பால் ஒன்றிணைந்து காணப்பட்டார்கள். அது அற்புதமான விடயம் எனத் தெரிவித்துள்ள அவர், ஆனால் இனக்கலவரத்தின் காயங்கள் மோதலின் காயங்கள் இன்னமும் ஆறவில்லை அவை இன்னமும் ஆறவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மக்கள் இயக்கம் சரியாதை பாதையை நோக்கிய நடவடிக்கை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய தலைமுறைக்கு சரியான எண்ணங்கள் உள்ளமை தொடர்பாக நான் மகிழ்ச்சியடைகின்றேன், அவர்கள் தங்களை தனித்தனி இனக்குழுவாகப் பார்ப்பதற்கு பதில் இலங்கையர்களாக பாக்கின்றனர். இதனைக் காப்பாற்ற முடியும் என நினைக்கின்றேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை எதிர்கொண்ட முன்னொருபோதும் இல்லாத நெருக்கடியின் போது இந்தியா வழங்கிய உதவி தொடர்பாகவும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

# களனிதிஸ்ஸ மின்னுற்பத்தி நிலைய செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டன!

களனிதிஸ்ஸ சுழற்சி மின்னுற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகளை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மின் பொறியியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய வியாழக்கிழமை நள்ளிரவு முதல் மின்னுற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டன. மின்னுற்பத்தி நிலையத்தை செயற்படுத்துவதற்கான நெப்தா எரிபொருள் இல்லாமையே இதற்குக் காரணம் என்றும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதன் காரணமாக 165 மெகாவோட் மின்சாரம் இழக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை களனிதிஸ்ஸ அனல்மின் நிலையத்தை ஒரு நாளுக்கு இயக்குவதற்கு சுமார் 9 லீற்றர் நெப்தா எரிபொருள் தேவைப்படுவதாகவும் மின் பொறியியலாளர்கள் சங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# உரலார் கேள்வியும் .....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்படியாய் தமிழ்நாட்டின் எல்லாக்கட்சித் தலைவர்களின் அன்பையும் பெற்ற நான், ஒரு கட்சியின் ஆதரவாளனாகவோ, இன்னொரு கட்சியின் எதிர்ப்பாளனாகவோ இருப்பதற்கு வாய்ப்பேயில்லை.

பாண்டேயின் மீதும், அண்ணாமலையின் மீதும் அவர்கள் ஆற்றல் கண்டு எனக்கு மதிப்புண்டு. அதைச் சொல்ல நான் ஏன் தயங்கவேண்டும்? அவர்களிடம் பிழைகள் கண்டால் அதனைச் சொல்லவும் நான் தயங்கமாட்டேன். அதுபோலத்தான் மற்றவர்களிடமும்!

அண்மைக்காலமாக எனக்கு ஆளும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சில உறுப்பினர்கள் மீது கசப்பு உண்டாகியிருப்பது உண்மையே. பல சமயத்தவரும் கூடி வாழும் ஒரு பிரதேசத்தை ஆள்பவர்கள், அனைவருக்கும் பொதுவானவர்களாய் இருக்கவேண்டியது அவசியம். ஆனால் இன்றைய ஆளுங்கட்சி உறுப்பினர்களில் ஒரு சிலர் செய்துவரும், இந்து மதத்தின் மீதான கீழ்த் தரமான தாக்குதல்களைச் சகிக்க முடியவில்லை. அவர்கள் சிறுபான்மையினரை மகிழ்விப்பதாய் எண்ணிப் பெரும்பான்மையினரை நோகச் செய்கிறார்கள். எங்கள் சமயத்தின் மூல தெய்வமான சிதம்பர நடேசரைக்கூடக் கீழ்மையின் எல்லை தொட்டு ஒருவர் விமர்சிக்கிறார். அதுபோலவே கட்சியின் மூத்த உறுப்பினர்கள் ஒருசிலரும் வெளிப்படையாகவே இந்து மதத்தைத் தாக்கிப் பேசி வருகின்றனர். இவைகண்டும் அரசு பேசாமல் இருக்கிறது. அதனால் இன்றைய அரசு இந்து மதத்தின் மீது மறைமுகமாய்ப் போர் தொடுத்திருக்கிறதோ? என எண்ணவேண்டியுள்ளது. இவை கண்டு வெறுப்படையாமல் எப்படி இருக்கமுடியும்?

பா.ஜ.க. சார்ந்த பல தலைவர்களும் இதேபோல வேறு சமயங்களைப் புண்படுத்துவதில்லையா? என்று கேட்பீர்கள். அதுவும் தவறென்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை. அதனால்த்தான் அத்தகைய தலைவர்கள் எவரையும் நான் இதுவரை பாராட்டி எழுதியதில்லை. அண்ணாமலையிடம் அந்த அநாகரிகத்தைக் காண முடியாததால்த்தான் அவரைப் பாராட்டி எழுதினேன். அது பிழை என்றால் நான் ஒன்றும் செய்யமுடியாது.

**சல்லடையாரின் சலிப்பு * என்னத்தைச் சொல்ல, வாரிதியாருக்கும் கட்சிச்சாயம் பூசப் பார்க்கிறார்கள். அவராவது? அணிசாருவதாவது?**

**4. உரலார் கேள்வி:-** உங்களின் கம்பன், வடநாட்டாரை உயர்த்தித் தமிழ்நாட்டாரைத் தாழ்த்தினானாமே?

**உலக்கையார் பதில்:-** இப்போதெல்லாம் பெரும் பாலும் அறிஞர்களுக்குப் பதிலாக, பொதுவெளிகளில் மூடர்கள்தான் அதிகம் பேசத் தொடங்கியிருக்கிறார்கள். மக்கள் மத்தியில் கவிச்சக்கரவர்த்தி கம்பனை, தமிழினத்தின் எதிரியாகவும் வடநாட்டவரின் ஆதரவாளனாகவும் காட்டிய பதிவு, தம் அரசியல் நலத்திற்காக, ஒரு சிலரால் விதைக்கப்பட்ட விஷ விதை தான்.

கம்பனின் அறிவுப்புலம், தமிழ் சார்ந்தது. அவனுக்கு வாழ்வளித்த மண், நம் தமிழ்மண். அவன் படைத்துப் பெருமை கொண்டது, தமிழ்க் காவியம். அவனைப் போற்றியவர்கள், தமிழ் மக்கள். இதனை மனதில் ஆழப் பதிவு செய்துகொள்ளுங்கள். வடமொழி கம்பனின் மொழியும் அல்ல. வடபுலம் அவன் மண்ணுமல்ல. வடநாட்டாரிடம் அவன் ஏதும் பெற்றுக்கொள்ளவும் இல்லை. அப்படியிருக்கத் தமிழ்மொழியையும், தமிழினத்தையும் தாழ்த்தி, வடமொழியையும், வட இனத்தையும் பாராட்ட வேண்டிய தேவை கம்பனுக்கு எப்படி வரும்? காரணம் இல்லாது காரியம் விளையாது எனும் அடிப்படை உண்மையைக் கூட அறியாத இவர்தமை என்னவென்பது?

இந்தச் சாதாரண உண்மையைக்கூடத் தெரிந்து கொள்ளாமல், கம்பன்மேல் பலகாலமாகப் பழி சுமத்தி, இன்றைய இளையோரையும் அதை நம்ப வைத்திருக்கிறார்கள் சில கயவர்கள். கற்றவர்களுக்குத்தான் தெரியும் கம்பனின் அருமை. மற்றவர்களின் கருத்தை நாம் செவி கொள்ளாமல் விடுவதுதான் நல்லது.

**சல்லடையாரின் சலிப்பு * யாரிடம் கேட்டாய்? எதைக் கேட்டாய்? சூரியனிடமே வெளிச்சம் பற்றிக் கேட்கும் மூடத்தனம் இது.**

**5. உரலார் கேள்வி:-** சகலகலா வல்லவரே! சினிமா பற்றியும் அடிக்கடி பதில் சொல்லி வருகிறீர்கள். எங்கே இக்கேள்விக்குப் பதில் சொல்லுங்கள் பார்க்கலாம். நகை, சோகம் என்ற இந்த இரண்டு பாவங்களையும் காட்டுவதில் பெரிதும் வெற்றி பெறும் நடிகை யாரென்று சொல்லமுடியுமா?

**உலக்கையார் பதில்:-** என் நேரத்தை வீணாகச் செலவழிக்கச் சொல்கிறீர்கள். ஆனாலும் என்னைச் சோதிக்கவெனக் கேள்வி கேட்டபிறகு விடவா முடியும்? நகை மகிழ்ச்சியின் வெளிப்பாடு. சோகம் துன்பத்தின் வெளிப்பாடு. இவை இரண்டிலும் ஆட்சி பெறுவது என்பது மிக்க கடினமான காரியம் தான்.

தமிழ்ச் சினிமாவின் நகைச்சுவைப் பகுதியில் பல தசாப்தங்களாகக் கொடி கட்டிப் பறந்தவர், ஆச்சி என்று செல்லமாய் அழைக்கப்படும் நடிகை மனோரமா அவர்கள். அவர்களுக்கு நடிப்புத் துறையில் வராத பாவமே கிடையாது. நகைச்சுவையில் கொடிகட்டிப் பறந்தாலும் அவ்வப்போது சோகத்தையும் அவர் பிரமாதமாய் வெளிப்படுத்துவார். 'நாட்டாமை' படத்தில் நீதிகாய் சரத்குமார் உயிர் விட்டதும் மனோரம்மா கதறுகிற கதறல், சோகபாவத்தின் வேர்வரைத் தொடும் என்பதில் ஐயமில்லை. இப்படி எத்தனையோ படங்கள்.

ஆனாலும் முழுக்க முழுக்க நகைச்சுவைப் பாத்திரங்களையே ஏற்று வந்ததால், அவர் காட்டும் சோகம், ரசிகர்களை முழுமையாய் பாதித்தது என்று சொல்லமுடியாது. சோகத்தைப் பிழிந்து கொட்டுவதில் பழைய நடிகைகளான பானுமதி, பண்டரிபாய், பத்மினி, கே. ஆர்.விஜயா போன்ற பல நடிகைகளும் தனித்தனித் தன்மைகளுடன் வென்று காட்டியிருக்கிறார்கள். ஆனால் அவர்களிடம் நகைச்சுவைத் தன்மையைப் பெரிய அளவில் எங்கும் பார்த்ததாய் ஞாபகமில்லை.

நகை, சோகம் என்கின்ற இரண்டு பாவங்களை வெளிப்படுத்துவதில், ஒன்றின் பாதிப்பு மற்றதில் துளியளவும் சேராமல் வெற்றிக் கொடி நாட்டியவர் ஒருவர் இருக்கிறார். பல படங்களிலும் வந்து அழுவதையே வேலையாகச் செய்து 'அழுமூஞ்சி' நடிகை என்று பட்டமே பெற்ற அவர், சில நகைச்சுவைப் படங்களில் துளியளவும் அந்த சோகத்தின் சாயல் இல்லாமல் மற்றவர்களைச் சிரிக்க வைத்து வெற்றி கண்டிருப்பது பெரிய ஆச்சரியம். யார் அவர் என்று கேட்கிறீர்களா? பழைய நடிகை சௌக்கார் ஜானகியைத் தான் சொல்கிறேன். 'புதிய பறவை', 'காவியத்தலைவி' போன்ற பல படங்களில் கதாநாயகியாகவும் நடித்த அவர், நகைச்சுவை நடிகை எனும் முத்திரை தன்மேல் குத்தப்பட்டு விடும் என்று துளியளவேனும் கவலைப்படாமல், பல படங்களில் நகைச்சுவைப் பாத்திரங்களைத் துணிந்து ஏற்று, கலக்கித் தள்ளியிருக்கிறார். 'பாமா விஜயம்', 'எதிர்நீச்சல்' போன்ற பல படங்களில் அவர் ஏற்ற, நகைச்சுவை கலந்த பாத்திரங்களைச் சினிமா உலகம் மறக்காது. ரஜினிகாந்த் நடித்த 'தில்லுமுல்லு' படத்தில் அவரின் நகைச்சுவை உச்சத்தில் உச்சம். அவர் அழுமூஞ்சியாய் நடிக்கும் போது நகைச்சுவையின் சாயல் துளியளவும் இராது. நகைச்சுவையாய் நடிக்கும் போது அழுமூஞ்சித்தனம் மருந்துக்கும் இராது. அதனால் நகை, சோகம் என்கின்ற இரண்டு பாவங்களையும் வெளிப்படுத்துவதில் சந்தேகத்திற்கு இடமில்லாமல் சௌக்கார் அம்மாவிற்குத்தான் நான் முடிசூட்டுவேன்.

**சல்லடையாரின் சலிப்பு * அடஎங்கொப்பரானே! இந்த ஆளுக்கு இதெல்லாம் கூடத் தெரியுமா? போங்கோ என்னத்தைச் சொல்ல?**

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## பற்பொடி வியாபாரங்கள்

அங்கம் - 238

ஒருவர் தான் எதிர்கொள்ளும் நிலையிலிருந்து முன்னேறுவதற்கு வியூகங்கள் வைத்திருக்க வேண்டும். அவற்றின் நடைமுறைக்காக கட்டமைப்புக்களை அமைத்து இயக்கும் செயல் திறன் வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக, அவனது எதிரி எந்த விதத்தில் முன்னேறுகிறான், என்ன திட்டங்களை கையாளுகிறான் என்ற அறிவுகளும் வேண்டும்.

ஆனால் தற்சமயத்தில் தமிழ் மக்களது வியூகங்களோ ஊர்க் கோவில்களில், திருவிழாகாலங்களில் பற்பொடியும், லேகியங்களும், மூலிகைகள் சேர்த்த தைலங்களும் விற்பவர்கள் அவற்றின் அருமை பெருமைகளைப் பேசி, கூட்டம் சேர்ப்பது போல தேர்தல் மையம் கொண்ட அரசியலுக்காக, ஒற்றுமையற்ற, வியூகமற்ற, சர்வதேச முனைப்புகளை அவை எவ்வளவு தூரம் பாதிக்கும் என்ற அக்கறையற்ற போக்குகளில் பின்பற்றுவதாகத் தென்படுகின்றது.

மஹிந்தவையும் கோட்டாபயவையும் கனடா தடை செய்தமை பற்றி தமிழ் மக்கள் குதூகலம் கொள்கிறார்கள். மனதளவில் இனம் புரியாத திருப்தி. சிலர் இங்கிருந்து தமிழர் இலட்சியங்கள் மிகவும் இலகுவாக முன்னேற்ற மடையும் என்ற எண்ணப் பாங்கும் கொள்கிறார்கள். வெற்றிவாகை சூடுகிறார்கள்.

கனடாவின் தற்சமயம் நடந்த நகர்வு சர்வதேச அரசியலின் புவியியல் அரங்குகளில் நடக்கும் ஓர் அங்கமே. கனடா அரசு தனது உள்நாட்டில் இருக்கும் ஈழத் தமிழரின் வாக்குகளின் ஆதரவைக் கணக்கெடுக்க, அங்கிருந்த மக்களின் அழுத்தங்கள் ஓரளவு பங்கு வகித்தன. ஆனால், அந்த அழுத்தங்களால் மாத்திரம் இது நடந்து விட்டது என மார்தட்டிக் கொள்ளக் கூடாது. காகம் இருக்கப் பனம்பழம் விழுந்த கதைதான். அப்படிப் பெருமைகள் தேடுவதன் வாயிலாக நடந்து கொண்டிருக்கும் காரியங்களுக்கு உலை வைக்கக்கூடாது. பொருளாதார சிக்கலில் இருக்கும் நாட்டை அதன் மீட்சிக்கு உதவுவதன் நிபந்தனையாக இனப்பிரச்சனைக்கு தீர்வுகண்டுஸ்திரமானநிலையைநிலையை அடையுமாறுசர்வதேசம்வற்புறுத்துகிறது.

அந்தத்தீர்வை அடையும் வியூகங்கள் தமிழ் மக்களின் தரப்பிலேயே உண்டு. ஆனால் எந்த சர்வதேச சமூகமும் இந்தியாவின் பிராந்திய மேலாண்மை இந்து சமுத்திரத்தில் இருக்கும் வரை தனிநாடு என்பதை ஆதரிக்க மாட்டாது என்பதை யாவரும் அறிந்தவர்கள்தான். ஏதாவது சர்வதேசம் அப்படியான நம்பிக்கைகளை ஏதாவது தரப்புகளுக்குத் தந்து, அவர்கள் அந்த நம்பிக்கைகளில் முன்னேறுகிறார்கள் எனின், அவர்கள் மன்னிக்கவும். இந்தக் கருத்தை உதாசீனம் செய்து விடவும்.

கனடா இந்தத் தடை உத்தரவுகளை அறிவித்ததால் தமிழ் மக்கள் சர்வதேசத்தின் நகர்வுகளைக் கையில் வைத்திருக்கிறார்கள் என்ற எண்ணப் பாங்கில் காரியங்கள் மேற்கொள்ளுவது எதிர் வினைகளைத்தான் தோற்றுவிக்கும். அப்படியான எண்ணங்கள் வாஸ்தவமானால், கனடா தமிழ் மக்களின் அழுத்தங்களில், அன்றில் கோரிக்கைகளில், விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படாது விடப்பட்டிருக்க வேண்டும். அன்றில் போரின் பின் பல உண்மைகள் சர்வதேசத்துக்கு தெரிய வந்தபோது அந்தப் பட்டியலில் இருந்து விடுதலைப் புலிகள் நீக்கப்பட்டு இருக்க வேண்டும்.

நாடு கடந்த தமிழீழ அரசு அமெரிக்காவில் இயங்கியும், பிரித்தானியாவில் லட்சக்கணக்கான தமிழர்கள் வாழ்ந்தும் அங்கும் அது நடைபெறவில்லை. ஏனெனில் இவை ஓர் உலக ஒழுங்கில், சர்வதேசத்தினால் நடத்தப்பட்டவை. அந்த ஒழுங்கு விடுதலை புலிகளை பொறுத்த மட்டில் இப்பொழுதும் கடைபிடிக்கப் படுகிறது.

கிறிஸ்தவர்களுக்கு இயேசு தேவதூதன்தான் அன்னை மரியாளுக்கு அவர் ஞானக் குழந்தைதான். ஆனாலும் ஏசு சிலுவையில் அறையப்பட்டார். காரணம் யூத மக்களின் மேலான அதிகாரம் ரோம சாம்ராஜ்யத்தின் கைகளில் இருந்தது.

### முன்னணியின் கூற்று

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சுகாஷ் "தமிழ் மக்கள் தேசியமாவீரர்களின் தியாகங்களுக்குப் புறம்பாக செயற்படுகின்ற எவரோடும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பேச்சு நடாத்தவோ அல்லது இணைந்து செயற்படவோ போவதில்லை." – என்கிறார். அதற்குக் காரணமும் கூறுகிறார்.

"கூட்டணி ஆகட்டும், தமிழரசு ஆகட்டும், அவை ஒற்றையாட்சிக்கு ஆதரவளித்த கட்சிகள்.

மாறாக, மாவீரர்களின் தியாகத்திற்கு புறம்பாக செயற்படும் எவரோடும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பேச்சு நடத்தவோ இணைந்து செயற்படவோ போவதில்லை. தமது போலி முகத்திரை கிழிக்கப்பட்டதும் அதற்குப் பரிகாரம் தேடும் வகையில் தமிழ்த் தேசிய முனணனியையும் இணைக்கப் பார்க்கின்றார்கள்.

ஆயுதப் போராட்டத்தின் பின் இக் கட்சிகள் ஒற்றையாட்சிக்கு ஆதரவளித்தமையால்தான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை உருவாக்கினோம். ஆகவே எவரோடும் கூட்டு வைக்க மாட்டோம்." – என ஊடகங்களுக்கான செய்தியில் அவர் தெரிவிக்கிறார்.

அந்த நிலைப்பாட்டில் அவர்கள் தொடர்ச்சியாக விட்டுக் கொடுக்காது நிற்கின்றார்கள். அந்தக் கொள்கைக்காக மக்கள் தங்களோடு நிற்பார்கள் என்ற நம்பிக்கை.

"தேசிய மாவீரர்களின் தியாகங்களுக்கு புறம்பாக செயல்படும் எவரோடும்" எனக் கூறும் போது மாவீரர் செய்த தியாகங்கள் தனி நாட்டுக்கு – தமிழினத்துக்குத் தான். ஆகவே அதுதான் தொடர்ந்த



நிலைப்பாடு என்கிறாரா அல்லது தேர்தலுக்காக ஆறாவது அரசமைப்பு திருத்தத்தை ஏற்று, அதன் கீழ் தமிழ் தேசம் என்கிறாரா என்பது குழப்பமானது.

சர்வதேசத்திற்கும், அவர்கள் ஆதரவு தராத இந்த அரசியல் நிலையை வற்புறுத்தி, விடுதலை புலிகளின் தொடர்ந்த தடைகளுக்கும் காரணமாகிறார்கள். அவ்வாறாயினும் அது அவர்களது அரசியல். மக்களைப் பொறுத்தது.

சுகாஷின் கூற்றுப்படி தமிழர் கூட்டணியும், பேச்சு வார்த்தைகளில் பங்கு பற்றிய மற்றைய தரப்புக்களும் 13 ஆம் திருத்தத்தின் அடிப்படையிலான தீர்வை கேட்க ஒத்து வருகிறார்கள் என்ற செய்தியும் பின்னிப் பிணைந்துள்ளது.

அப்படியானால் பேச்சுவார்த்தைகள் காணி, பொலிஸ் அதிகாரங்கள் பற்றியனதாகவும், டக்ளஸ் கூறுவது போல் மாகாணத்தில் இருந்து எடுக்கப்பட்ட அதிகாரங்கள் மீண்டும் தரப்பட வேண்டும் என்பதாக இருக்கலாம். சர்வதேசம் – இந்தியா உட்பட – ஆதரிக்கக் கூடிய தீர்வாக மற்றத் தரப்புகள் பார்க்கலாம். தேர்தலில் அவையும் மக்களின் கையில் இருக்கும்.

### பேராண்மை பெறும் ஈட்டிகள்

இவர்கள் இப்படி பிடிபட்டும் கடிபட்டும் கொண்டிருக்க, பேராண்மையின் பிரதிநிதிகள் எப்படியான காய்களை நகர்த்துகிறார்கள்?

இனப் பிரச்சினைத் தீர்வுப் பேச்சுக்களில் எதுவித அபிப்பிராயங்களும் வெளிப்படையாக தராது பின்னணியில் இயங்கினார் மஹிந்தர். கூட்டமைப்பின் சம்பந்தனை சந்தித்து பொன்னாடை போர்த்தி, கருணாவையும் பிள்ளையானையும் உள்ளூராட்சித் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் போட்டியிட ஒழுங்குப்படுத்தி, தற்பொழுது முக்கிய தமிழ் ஊடகங்களின் பிரதிநிதிகளை அழைத்து விருந்துபசாரத்தில் அவர்களின் சிந்தனைகளை அவிழ்த்து ஆழம் பார்த்து, அவை தமிழ் மக்களிடையே சென்றடைய வழிவகுத்துப் பந்தினை உருட்டி விடுகிறார்.

தீர்வினைத் தமிழ்ப் பகுதிகள் ஏற்காது நிராகரித்தால், தேர்தலில் சிங்கள தரப்புகளுக்கு ஆதரவாக இயங்கும் கட்சிகள் பெறும் வாக்கு வீதத்தில், தங்களோடு ஒற்றையாட்சியில் வாழ்வதற்கு தமிழ் மக்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலோ அல்லது மற்றைய மாகாணங்களிலோ பாரிய எதிர்ப்புகள் தெரிவிக்கவில்லை என்ற சதுரங்க காய்கள் உருளும். தமிழர் தான் நியாயமான தீர்வுக்கு எதிராக நிற்கிறார்கள் என்ற பிரச்சாரம் கிளம்பும்.

ஆக, இந்தப் பேச்சு வார்த்தைகளில் சம்பந்தன் சுட்டு விரல் காட்டி "கையளித்தவர்கள் யாவரையுமே நீங்கள் கொன்று விட்டீர்கள் என்பது எங்களுக்கு தெரியும்" எனக் கூறியதும், சுமந்திரன் அடிக்கடி ஊடகங்களுக்கும் நேரடியாகவே "அமெரிக்காவும் சர்வதேசமும் போர் குற்றங்களையும் பொறுப்புக்கூறலையும் மனித உரிமை பேரவையில் அழுத்தம் கொடுத்ததற்கு கூட்டமைப்பு எடுத்த நடவடிக்கைகள்தான் காரணம்" என பெருமைக்கு பன்றி வளர்க்க வெளிக்கிடுவதும், நம்பிக் கையற்றே பேச வந்திருக்கிறோம் என்பதும் சாதுரியமானவை அல்ல. காணி அதிகாரத்துக்கும் பொலிஸ் அதிகாரத்துக்கும் மஹிந்த ஒத்துவரார் என்பதை தயான ஜெயதிலக குறித்து, மஹிந்தவின் அந்த நிலையை மீறி செயல்பட சஜித்தும் பின் வாங்குவார் என்பதால், இவற்றை தமிழர் தரப்புகள் இந்தியாவின் அனுசரணை யோடு பெற்றுக் கொள்ள வேண்டும் என்று புத்திமதி கூறினார்.

மஹிந்த, கோட்டாபய அரசியல்வாதிகள், ஆயின், அடித்தளத்தில் சாமானிய மனித ஆசைகளும் உணர்வுகளும் கொண்டவர்கள். அவர்கள் இருவருமே தாங்கள் கொலையாளிகள் என மனதார ஏற்றுக்கொள்ளவில்லை. பௌத்த தர்மத்தைப் பாதுகாக்க, மக்கள் தங்களுக்கு அதிகாரம் தந்தமையால் அதற்காக யமகிங்கிரர்கள் போல் எதிரானவர்கள் எவரையும் அழிப்பது தர்மத்துக்கு எதிரானது அல்ல எனக் கருதுகிறார்கள்.

தமிழ் மக்களும் சர்வதேசமும் வேறுபடலாம். ஆனால் அவர்களுக்கு தர்மமும் பிரித்தும் ஓதும் கலாநிதி பட்டங்கள் கொண்ட தேரர்களும் துறவிகளும் அதற்கு ஆதரவு தருகிறார்கள்.

அவற்றிடையே கனடா நாட்டில் தடைகள், அமெரிக்க சட்டமாக்கியுள்ள 'போர்க் குற்றங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி' என்ற சட்டம் தனிப்பட்ட ரீதியில் அவர்களை – முக்கியமாக கோட்டாபயவை – அவரது அபிலாசைகளை ஒட்டிப் பாதிக்கிறது.

இந்தச் சட்ட மூலம் அமெரிக்கா நடத்திய போர்களின் விளைவுகளால் பாதிக்கப்பட்டவர்கள் அமெரிக்கர்களையே பந்தாடுவார்கள் என ஜனாதிபதி ட்ரம்ப் கையெழுத்திடாமல் தவிர்த்தார். மனித உரிமைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்த ஜனாதிபதி பைடன் அதனை கையெழுத்திட்டுச் சட்டமாக்கியுள்ளார். இவை தீர்வு பேச்சுகளுக்கு எதிர்வினைகளை தர இவர்களால் பாவிக்கப்படலாம். அவற்றை நாளை பார்ப்போம்.

(வளரும்...)

## விக்கி தரப்பை ...

(02ஆம் பக்கம் பார்க்க)

ளராக நீதியரசர் விக்னேஸ்வரனை அறிவிக்கவும்,

உடன்படும் சமரசத் திட்டமே நேற்று பிரயோகிக்கப்பட்டு ஒரளவு இணக்க நிலை ஏற்பட்டது,

மீன சின்னக் கட்சிக்கு இப்போது செயலாளராக இருப்பவர் முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்.

தமது மான் சின்னத்தையும், அதன் மூலம் புதிய கூட்டின் பொதுச் செயலாளர் பதவியையும், இலக்கு வைத்த நீதியரசர் விக்னேஸ்வரன் அது கிட்டாத நிலையில் கூட்டமைக்கும் முயற்சியில் இருந்து வெளியேறினார் என்பது தெரிந்ததே.

நேற்று இரவு மான் சின்னத்துக்குப் பதிலாக மீன் சின்னத்தை ஏற்கவும், அதே சமயம் அந்தக் கட்சியின் செயலாளர் பதவியை தமக்குத் தரவும் விக்கியர் அடம் பிடித்தார் எனத் தெரிகிறது.

மீன் சின்னத்தை வைத்திருக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியினர் அதற்கு இணங்கினாலும், கட்சியின் உரிய அதிகார பீடங்களை கூட்டி, அந்த மாற்றங்களை இனிச் செய்து தேர்தலுக்கு முன்னர் அதை நடைமுறைக்கு கொண்டு வருவதற்குச் சாத்தியம் அடியோடு கிடையாது என சமபந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

## இந்திய மீனவர்களைப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலகத்தில் மகஜரைக் கைளித்த போது அந்த மகஜரைப் பெற்றுக்கொண்டபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

எமது மீனவர்களின் பிரச்சினைகளை நான் நன்கு அறிவேன். இந்த பிரச்சினை நீண்ட காலமாக நடைபெறுகிறது. ஆகையால் இதில் நீங்கள் கடற்படையினரை மட்டும் நம்பாது நீங்களும் எதிர்க்க வேண்டும். அதற்காக பிடிப்பதற்கும் இடிப்பதற்கும் இரண்டு பாரிய படகுகளை நான் தருகிறேன். – என்றார்.

இதன்போது மீனவர்கள் படகு வெள்ளோட்டத்திற்கு நீங்கள் வரவேண்டும் என்றனர்.

அதற்கு அவர் நான் ஒன்றைக் கூறி விட்டு பங்கருங்குள் (பதுங்குகுழிக்குள்) ஒளிந்திருக்க மாட்டேன். நானும் வருவேன்." – என்றார்.

குருநகரில் இருந்து ஆரம்பமாகிய இந்தப் பேரணி நீரியல் வளதிணைக்களத்திற்கு சென்று அங்கு மகஜர் கையளிக்கப்பட்டது.

பின்னர் அங்கிருந்து கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது அலுவலகத்திற்கு சென்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் மகஜர் ஒன்றை ஆர்ப்பாட்டக்காரர்கள் கையளித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாகைகள் ஏந்தியவாறும், கோஷமிட்டவாறும், போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்தில் பல நூற்றுக்கணக்கான மீனவர்கள் கலந்துகொண்டனர்.

இதேநேரம் எல்லை தாண்டி வரும் இந்திய மீனவர்கள பிடிக்கவும் இடிக்கவும் வழங்கும் படகுகள் இரு வாரங்களிற்குள் வழங்கப்படும் என அமைச்சர் உறுதியளித்த அதேநேரம் இலங்கை கடற் பரப்பிற்குள் எல்லை தாண்டிய சமயம் பிடிக்கப்பட்டு தற்போது மயிலிட்டித் துறைமுகத்தில் தரித்து நிற்கும் இந்திய மீனவர்களின் படகுகளே இவ்வாறு இலங்கை மீனவர்களிற்கு வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## உத்தியோகத்தர்களுக்கு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரவு 7.30 மணியில் இருந்து 8.30 மணிவரை உத்தியோகத்தர்களை அழைத்து விவரத்தைக் கேட்டறிந்தார்.

இதே விபரங்களையும் வேறு சில விடயத்தையும் இரவு 8.30 மணியில் இருந்து 10 மணியும் தாண்டிய நிலையில் ஆளுநர் கேட்டறிந்தார்.

ஆளும் அரசு ஒன்றாக இருந்தும், இரவில் தனித்தனியாக அழைத்து உயிர் போகின்றது என சலித்துக்கொண்டனர் உத்தியோகத்தர்கள்.

## சீனக் குழு இன்று .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச விவகாரங்களுக்கான துணை அமைச்சர் சென் ஜாவோ தலைமையில் இந்த குழு இலங்கை வரவுள்ளது.

அவர்கள் நாட்டில் தங்கியிருக்கும் காலத்தில், இலங்கை அரசாங்கத்தின் பிரதானிகள் மற்றும் உயர்மட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளனர்.

## 19,20 இல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## வாக்குகளை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிலளிக்கும் போதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்கள் மத்தியில் புதிதாக உருவாக்கப்படும் கூட்டுகள்கள் மக்களின் நலன்சார்ந்தவை அல்ல வாக்குகளை எவ்வாறு அபகரிப்பது என்பதே அவர்களின் நோக்கமாகும். அங்கு மக்கள் நலன் பின் தள்ளப்படுகிறது.

அரைத்த மாவை மீள அரைக்கும் செயற்பாடுகளையே தமிழ்க் கட்சிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளகின்றன. – என்றார்.

## ரணிலின் நாளைய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேசத்திற்கு தமிழர்களுடன் இணைந்திருக்கின்றோம் என்பதை வெளிப்படுத்து முகமாக இந்தப் பொங்கல் விழாவிற்கு ஜனாதிபதி யாழிற்கு வருகின்ற பொழுது அந்த வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து, அமைதிவழி போராட்டம் ஒன்றுக்கு யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அனைத்து தரப்பினருக்கும் அழைப்பு விடுத்து நேற்று ஊடக சந்திப்பொன்றை நிகழ்த்தியுள்ளது

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய கேட்போர் கூடத்தில் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் பொழுது யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இந்த அழைப்பை விடுத்துள்ளது.

இது குறித்து யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் அழகராசா விஜயகுமார் கருத்து தெரிவிக்கையில் –

எங்களுடைய தமிழ் மக்கள் வடக்கு, கிழக்கு எங்கிலும் பல்வேறு பிரச்சினைகளுக்குள் சிக்குண்டு, தொடர்ச்சியாக எதுவித அரசியல் தீர்வுகளும் இன்றி , தங்களுடைய நாள் ஒவ்வொன்றையும் கழித்து வருகின்ற நிலையில் காணாமலாக்கப்பட்டோர், அரசியல் கைதிகள், காணி விடுவிப்பு ,இராணுவ ஆக்கிரமிப்பு. பௌத்தமயமாக்கல் என அரசின் திட்டமிடப்பட்ட இனப்பிரச்சனைகளுக்குள் இருந்து மக்கள் இதுவரை வெளிவராத நிலையிலும், தேசிய பொங்கல் விழா ஒன்றினை இந்த ஜனாதிபதி எவ்வாறான மனநிலையில் யாழ்ப்பாணத்தில் நிகழ்த்த முடியும்? ஜனாதிபதி பொங்கல் விழாவை மேற்கொள்வதில் எங்களுக்கு எதுவித ஆட்சேபனையும் கிடையாது. தமிழர்களுக்குரிய பிரச்சினைகளுக்குரிய தீர்வு ஒன்றினை வழங்கிய பின்னர் அவர் அந்தப் பொங்கல் நிகழ்வை முன்னெடுப்பதற்கு தமிழ் மக்களாக நாங்களும் இணைந்து கொள்வோம்.


ஆகவே முதலில் தமிழ் மக்களினுடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். இது தீர்க்கப்படாது மேற்கொள்ளப்படுகின்ற இந்தப் பொங்கல் நிகழ்விற்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று எங்களுடைய பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய கேட்போர் கூடத்தில் சிவில் அமைப்புகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்களுக்கு அமைவாக தீர்மானம் எடுத்துள்ளோம். எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இந்தப் பொங்கல் நிகழ்வு நல்லூர்ப் பகுதியில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தில் இடம் பெற இருக்கின்ற தருணத்தில. பிற்பகள் 1 மணியளவில் யாழ் பல்கலைக்கழக முன்றிலில் கவனவீர்ப்புப் போராட்டம் ஆரம்பமாகி, தொடர்ச்சியாக பொங்கல் நிகழ்வு இடம்பெறும் இடத்திற்குச் சென்று நிறைவடையும். அதே நிலையில் இந்த பொங்கல் நிகழ்வை வடக்கு, கிழக்கு மக்களின் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், கட்சித் தலைமைகள், உட்பட்டவர்கள் அரசியல் பேதமின்றி முற்றாக நிராகரிப்பதோடு, எங்களுடைய இந்த சாத்தவீக போராட்டத்தில் பங்கு கொள்ள வேண்டும் என அழைப்பு விடுக்கிறோம். அனைத்து சிவில் அமைப்புக்கள், பொதுமக்கள் என அனைத்து தரப்பினரையும் இந்த போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம். – என அவர் மேலும் தெரிவித்தார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்
076 443 8622






# கண்ணீர் அஞ்சலி



**தமிழர்களின் தகைசார்ந்த சான்றோன்**

## அமரர் சுந்தரம் டிவகலாலா

**(இணைந்த வடக்குக் கிழக்கு மாகாண சபையின்
கல்வி, விளையாட்டு, கலாசார அமைச்சின் முன்னாள் செயலாளரும்
“ஆறுதல்” நிறுவனத்தின் நிர்வாகியும்)**

யாழ்.இந்துக் கல்லூரி சமூகத்தின் மூச்சென வாழ்ந்த சமூக சிற்பி, ஆளுமையாளன், மும்மொழி வல்லாளன், இனப்பற்றாளன், எங்கள் “அரசடி செனட்” நண்பர்கள் வட்டத்தின் ஆயுள் காலத் தலைவன்,

**போய் வா அன்ப. கண்ணீரோடு விடைதருகிறோம்.
நீயில்லா அரசடி இனி வெறுமையே...!**

**அரசடி செனட்,
யாழ்.இந்து மைதானம்**

**- நண்பர்கள்**

காலைக்கதிர் Kalaikkathir

# மனித உரிமை மீறல் குற்றவாளிகளுக்கு எதிராக தடைவிதிப்பதற்கு பிரிட்டன் தொடர்ந்தும் மறுப்பு

## அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் கரெத் தோமஸ் விசனம்

மனித உரிமை மீறல் குற்றவாளிகளுக்கு எதிராகக் கனடா தடைவிதித்துள்ள நிலையில், பிரிட்டனின் பழைமை வாதக் கட்சி அமைச்சர்கள் அத்தகைய நடவடிக்கையைமுன்னெடுப்பதற்குத்தொடர்ந்து மறுத்துவருகின்றமை தொடர்பாக அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் கரெத் தோமஸ் கடும் விசனம் வெளியிட்டுள்ளார்.

மிகமோசமான மனித உரிமை மீறல் குற்றங்களுடன் தொடர்புடைய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள்பிரதமர்மஹிந்தராஜபக்ஷ, சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்க மற்றும் லெப்டினன் கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி ஆகிய நால்வருக்கு எதிராக விசேட பொருளாதாரநடவடிக்கைகள்சட்டத்தின்கீழ் தடைவிதிப்பதாக கனேடிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு எதிராகத் தடைவிதிக்கப்படவேண்டும் என பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் அந்நாட்டு அரசாங்கத்திடம் வலியுறுத்திவரும் பின்னணியில், கனேடிய அரசாங்கத்தின் நடவடிக்கையை மேற்கோள்காட்டி தனது உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே கரெத் தோமஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுடன் தொடர்புடைய அரச அதிகாரிகளுக்கு எதிராக கனேடிய அரசாங்கம் தடைவிதித்திருக்கின்றது.

ஆனால் இங்குள்ள பழைமைவாதக் கட்சி அமைச்சர்கள் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை நிலைநாட்டுவதற்கு உதவும் வகையில் அத்



தகைய நடவடிக்கையை முன்னெடுப்பதற்குத் தொடர்ந்து மறுத்துவருகின்றார்கள் என்று அவர் அந்தப் பதிவில் தெரிவித்துள்ளார்.

---

## ஜனாதிபதி மாளிகையில் காணப்பட்ட தொல்பொருள்கள் சேதமாக்கப்பட்டமை குறித்த அறிக்கை தாமதமாகலாம்!

ஜனாதிபதி மாளிகையில் காணப்பட்ட தொல்பொருள்கள் சேதமாக்கப்பட்டமை தொடர்பிலான அறிக்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்படுவது மேலும் சில வாரங்களுக்கு தாமதமாகும் என தொல்பொருள் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் சில முக்கிய விடயங்கள் அந்த அறிக்கையில் சேர்க்கப்பட வேண்டியிருப்பதே இதற்கான பிரதான காரணம் என அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

ஜனாதிபதி மாளிகையில் சேதமாக்கப்பட்ட மற்றும் திருடப்பட்ட சொத்துக்கள் தொடர்பான தொல்பொருள் ஆய்வுகள் தற்போது நிறைவடைந்துள்ளன.

ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்த போராட்டக்காரர்களின் செயற்பாடுகள் காரணமாக அங்குள்ள பல பழங்கால பொருள்கள் சேதமாக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

---


## ஓமானில் இலங்கைத் தூதரக பாதுகாப்பு இல்லத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த இலங்கைப் பெண் மரணம்!

ஓமானில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் பாதுகாப்பு இல்லத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த இலங்கைப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்தப் பாதுகாப்பு இல்லத்தில் தங்க வைக்கப்பட்டிருப்பவர்களை நாட்டுக்கு அழைத்துவரும் நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இங்கு தங்க வைக்கபட்டிருந்தவர்களில் சிலர் அண்மையில் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

---

## நாட்டில் இராணுவத்தினரின் எண்ணிக்கையை குறைக்க திட்டமிடுகிறது பாதுகாப்பு அமைச்சு!



இராணுவத்தினரின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு இலங்கை அரசாங்கம் திட்டமிடுகின்றது.

தற்போது 20 லட்சத்து 783 ஆக காணப்படும் இராணுவத்தினரின் எண்ணிக்கையை 2024 இல் ஒரு லட்சத்து 35 ஆயிரமாகக் குறைப்பதற்கு எண்ணியுள்ளது என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

2030 இல் இராணுவத்தினரின் எண்ணிக்கையை ஒரு லட்சமாகக் குறைக்கவுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரெமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தேசியப் பாதுகாப்பு தேவைகளுக்கு ஏற்ப எதிர்கொள்ளக்கூடிய பாதுகாப்பு சவால்களுக்குத் தீர்வைக் காண்பதற்காக சிறந்ததிறன் உள்ள இராணுவத்தை உருவாக்கும் நோக்கம் தொடர்பாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

---

## மொனராகலை எஸ்.எஸ்.பி. சிசிர குமார ஹேரத் உடனடியாக பதவி இடைநிறுத்தம் செய்யப்பட்டார்!



மொனராகலை பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசிர குமார ஹேரத் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இதன்படி மொனராகலை பிரிவுக்கு பொறுப்பாக இருந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசிர குமார ஹேரத்தின் பணி இடைநீக்கம் கடந்த 10 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படவுள்ளது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துக்கு அமைய பொலிஸ் மா அதிபர் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளார்.

---

## பனைத்திருவிழா - 2023 ஆக்கத்திறன் விருத்தி!

எதிர்வரும் 21.01.2023 நிகழவுள்ள பனைத்திருவிழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான ஆக்கத்திறன் விருத்தி போட்டிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்தப் போட்டிகள் பாடசாலை மாணவர்களுக்கு மூன்று பிரிவுகளாக நடாத்தப்படுகின்றன.

தரம் 1 - 5 : சித்திரப்போட்டி

தரம் 6 - 9 : கட்டுரைப்போட்டி

தரம் 10 - 13 : ஆய்வுக்கட்டுரைப் போட்டி

மேற்படி போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்கள் அவர்களது ஆக்கங்களை பின்வரும் வழி வகைகளின் ஊடாக அனுப்பி வைக்க முடியும். (மூன்றில் ஒரு வகையில் அனுப்பி வைக்க முடியும்)

Whatsapp - 0771081409

மின்னஞ்சல் - panaithiruvizha@gmail.com

தபால் - 209, எழுதிரள், பலாலி வீதி, கோண்டாவில், யாழ்ப்பாணம் அனுப்பப்படும் ஆக்கங்களுடன் மாண வரின் முழுப்பெயர், தரம், பாடசாலை பெயர் மற்றும் தொலைபேசி இலக்கம் கட்டாயமாக இணைக்கப்பட வேண்டும்.

ஆக்கங்கள் அனுப்பி வைக்க வேண்டிய இறுதி திகதி: 2023.01.19

ஆக்கங்கள் மாணவர்களுடைய ஆக்கங்களாக இருப்பதுடன், தெரிவு செய்யப்படும் ஆக்கங்களுக்கான சான்றிதழ் மற்றும் பரிசில்கள் வழங்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு: 077955 8919 / 0776785023

மாணவர்கள் அனைவரும், எமது கலாசார பொருண்மியமாக திகழும் 'பனை' தொடர்பான தமது சிந்தனைகளை ஆக்கங்களாக உருவம் கொடுத்து போட்டிகளில் பங்குபற்றவும்.

---

## நாட்டில் அதிக எரிசக்தியை உற்பத்தி செய்ய தொடர்ந்து முதலீடுசெய்ய இந்தியா விருப்பம்!

நிலையான சக்தி மூலங்களிலிருந்து அதிக எரிசக்தியை உற்பத்தி செய்ய இலங்கையில் தொடர்ந்து முதலீடு செய்ய இந்தியா விருப்பம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடியை மேற்கோள்காட்டி, மறுபயன்பாடு, மறுசுழற்சி, மறுவடிவமைப்பு, மறு உருவாக்கம் போன்ற நிலைத்தன்மையை நோக்கிய முக்கியமான படிகள் இந்தியாவின் கலாசார நெறிமுறைகளின் ஒரு பகுதியாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் அபரிமிதமான புதுப்பிக்கத்தக்க சக்தி உள்ளது என்பதை எடுத்துக்காட்டிய பாக்லே, நிலையான சக்தி மூலங்களிலிருந்து அதிக சக்தியை உற்பத்தி செய்வதற்காக இலங்கையில் இந்தியா தொடர்ந்து முதலீடு செய்யும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒத்துழைப்பின் முக்கிய துறையாக கல்வி விளங்குவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய தொழில்நுட்ப நிறுவனம், மெட்ராஸ், இலங்கை தொழில்நுட்ப வளாகத்தில் முதுகலைப் படிப்புகளை விரிவுபடுத்தத் தொடங்கியுள்ளது.

மேலும், இலங்கை மாணவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் இளங்கலை முதல் முனைவர் பட்ட படிப்பு வரை நூற்றுக்கணக்கான முழு நிதியுதவியுடன் கூடிய புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

இலங்கையில் கல்வியைத் தொடரும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்கு நிதி உதவித் திட்டங்கள் தனித்தனியாக வழங்கப்படுவதாக கோபால் பாக்லே மேலும் தெரிவித்துள்ளார்.

---

## போதைப்பொருள்களுடன் இருவர் மதவாச்சியில் கைது!



மதவாச்சியில் போதை மாத்திரைகளுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வியாழக்கிழமை பிற்பகல் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கை தொடர்பில் மேலும் தெரியவருகையில் -

மதவாச்சியில் விஷேட அதிரடி படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது மதவாச்சி பகுதியில் 100 போதை மாத்திரைகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் போதை மாத்திரைகளுடன் மதவாச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.01.2023இல் வெளியிடப்பெற்றது.